# சுடர்
CHUDAR

கலை
இலக்கியத்
திங்கள்
இதழ்

சித்திரை
*
வைகாசி
*
1978



விலை ரூபா 1.00

# செய்தி அலைகள்

## லஞ்சவாதிகள்

லஞ்சம் வாங்குவது இலங்கையில் ஒரு சட்ட விரோதமான செயல் அல்ல என்று தான் தலைமன்னார் கப்பல் மூலம் இலங்கைக்கு வருவோரும் போவோரும் எண்ணவேண்டியிருக்கின்றது. ஏனெனில் அந்த அளவுக்கு தலைமன்னார் இறங்குதுறையில் இலஞ்சப்பேய் தலைவிரித்தாடுகின்றதாம்.

சிற்றூழியர் தொடங்கி பெரும் உத்தியோகத்தர் வரையில் வாயினால் கேட்டு வாங்குமளவுக்கு பகிரங்கமாக இது நடைபெறுகின்றதாம். பிரயாணிகளும் எப்படியாவது போய்ச்சேரவேண்டும் என்ற அவசரத்திலும் ஏதாவது முரண்டு செய்தால் பொருள் பறிமுதல் செய்தோ, அல்லது அதிக வரிகள் போட்டோ இடர்தருவார்கள் என்று அஞ்சி கேட்டதைக் கொடுத்துவிட்டு அழுது தொலைக்கிறார்களாம்.

லட்சியவாதிகள் நடத்தும் அரசிலே லஞ்சவாதிகளுக்குப் பஞ்சமில்லை போலும்.

## மணியனின் அறியாமை

'இதயம் பேசுகிறது' மணியன் எழுதும் தனது இலங்கைப் பயணக்கட்டுரையிலே யாழ்ப்பாணத்தில் ஹொட்டல் ஒன்றில்தான் இட்டலி சாப்பிட்டதின் பின்னர் தனக்கு பத்திரிகைத் துண்டு ஒன்று கொடுக்கப்பட்டது என்றும், தான் அதை படிக்கத்தொடங்கவே ஹொட்டல் ஊழியர் அது படிப்பதற்கல்ல கைதுடைப்பதற்கு என்று கூறினார் என்றும் கிண்டலாக எழுதியிருந்தாரல்லவா.

அண்மையிலே தமிழ் நாடு சென்றிருந்த இலங்கையர் ஒருவர் மதுரையில் 'சாரதா மெஸ்' ஹொட்டலில் சென்று சாப்பிட்ட பொழுது அவருக்கும் கைதுடைக்க பத்திரிகைத் துண்டு கொடுக்கப்பட்டதாம்.

"இது எதற்கு படிக்கவா?" என்று கேட்டாராம் இலங்கையர்.

"இல்லீங்க கைதுடைக்க என்றாராம் ஊழியர்.

"உலகத்தைச் சுற்றி வந்து பயணக் கட்டுரை எழுதும் மணியனுக்கு உள்நாட்டு நடப்புகள் மட்டும் தெரியாதாக்கும்" என்று கேட்டார் இலங்கையர். ஹொட்டல் ஊழியர் ஏதும் புரியாமல் விழிக்கவே விடயத்தை விளக்கிச் சொன்னார் அந்த இலங்கையர்.

## நமக்குக் குமட்டும் விருந்து

பிலிப்பைன் நாட்டிலே விசித்திரமான பழக்க வழக்கங்கள் உள்ளன. இருபத்தைந்து பேருக்கு விருந்துக்கு அழைப்புக்கொடுக்கப்பட்டிருந்தால் 250 பேருக்கான உணவு சமைப்பார்கள்.

ஏனென்றால் அழைக்கப்பட்ட ஒவ்வொரு விருந்தாளியும் தான் விரும்பிய எத்தனை பேரையும் அழைத்துக் கொண்டு செல்லலாம். அப்படிக் கூட்டிக்கொண்டு செல்பவர்கள் கௌரவக் குறைவாக எண்ணுவதுமில்லை. விருந்து கொடுப்பவர்கள் அதையிட்டுக் கவலைப்படுவதுமில்லை. பதிலாக அது அவர்களைப் பெருமைப்படுத்துவதாகக் கருதுகின்றார்கள். ஆனால்......

விருந்துகளில் சமைக்கப்படும் உணவுகளில் முக்கியமான உணவு என்ன தெரியுமா? நமது நாட்டைப் போல கோழியோ, ஆடோ அல்ல 'நாய்' இறைச்சி. நாய் இறைச்சி இல்லாத விருந்துகளே கிடையாது. இதற்கென்றே ஒவ்வொரு வீட்டிலும் நாய் வளர்க்கின்றார்கள்.

இந்தச் செய்தியை கேட்ட சிரித்திரன் ஆசிரியர் சொன்ன கருத்து என்ன தெரியுமா? நம்ம நாட்டு தெரு நாய்களை பிடிச்சு அநியாயமாய் கொல்லாமல் வளர்த்து பிலிப்பைன்சுக்கு ஏற்றுமதி செய்தால் அரசாங்கம் ஏராளமான அந்நியசெலாவணியை சம்பாதிக்கலாமல்லவா என்றார்.

சுடர்
கலை இலக்கியத்
திங்கள் இதழ்

சித்திரை, வைகாசி 1978
சுடர் 4—ஒளி 1, 2.

# ஒப்பிட்டுப் பாருங்கள்

துறைமுகங்களை நோக்கி கப்பல்கள் விரைகின்றன!

பத்திரிகையில், வானொலியில் பிரசாரம் முடுக்கிவிடப்படுகிறது!

ஒன்றல்ல, மூன்று தூதரங்களின் கதவுகளை இழுத்துச் சாத்தும்படி உத்தரவு பறக்கிறது!

நிதி உதவி சட்டென்று வெட்டப்படுகிறது!

இந்தத் தடபுடல்—ஆவேச உத்தரவுகள் யாரால் ஏன் எங்கே எப்போது போடப் பட்டது என்று கேட்கிறீர்களா?

வியட்நாம் நேற்று முகிழ்ந்த ஒரு குட்டி நாடு. அங்கே சீன வம்சாவழியினர் பல இலட்சம் மக்கள் பல தலைமுறையாக வாழ்கிறார்கள். அவர்களை வியட்நாமிய அரசு விரட்டி வெளியேற்றுகிறதாம். அதற்கு பதிலடியாக நவசீனா மேற்காட்டிய நடவடிக் கைகளை மின்னல் வேகத்தில் ஒன்றன்பின் ஒன்றாக எடுக்கிறது.

வியட்நாம்—நவசீனம் இந்த இரண்டு அரசுகளில் எந்தப் பக்கம் நியாயம் இருக் கிறது. யார் சரி, யார் பிழை என்பதல்ல பிரச்சினை.

வியட்நாமில் உள்ள சீன வம்சாவழியினர் பிரச்சினையை ஒரு கௌரவப் பிரச் சினையாக எண்ணிக் கொண்டு நவசீனம் செயல்பட்டவேகம், எடுத்த உறுதியான தீவிர நடவடிக்கை இவற்றைத்தான் நாம் கவனிக்கவேண்டும்.

இவ்வளவிற்கும் வியட்நாமும்—நவசீனமும் பொதுவுடமை நாடுகள் இரண்டு நாட்டிலும் தொழிலாளவர்க்கத்தின் சர்வாதிகார ஆட்சி கோலோச்சுகிறது. நேற்று வரை தோள்மேல் கைபோட்டுக்கொண்டு "மச்சான்" முறை கொண்டாடினவர்கள் இருந்தும் என்ன? இனப்பிரச்சினை அரசியல்—பொருளாதார தத்துவத்துக்கு சமாதி கட்டி விட்டது.

நவசீனம் சீன மக்களை அவர்களது தாயகத்துக்கு கப்பல்களில் மீட்டுக்கொண்டு வருகிறது.

இந்தச் சம்பவத்தோடு இங்குள்ள இந்திய வம்சாவழியினரது பிரச்சினையையும் ஒப்பிட்டுப் பாருங்கள்.

வீடுகள் நொருக்கப்படுகின்றன.

தோட்டங்களிலிருந்து துரத்தப்படுகிறார்கள்.

தொழில் உரிமை பறிக்கப்படுகிறது.

வீதிகளில் பிச்சை எடுக்கும் உரிமையும் மறுக்கப்படுகிறது.

காவல்துறையினர் கைது செய்கிறார்கள்.

ஆடு, மாடுகளைப் போல பெட்டிகளில் அக்கரையில் அடைத்து கொண்டு போய் அவிட்டுவிடப்படுகிறார்கள். மீண்டும் நாடகம் தொடர்கிறது—

தொழில் இல்லை.

பிறந்த பொன்னாட்டிலும் பிச்சை எடுக்கிறார்கள்.

ஒரு சீனனோடு ஒரு தமிழனை ஒப்பிட்டுப்பாருங்கள்!

ஒரு சீனாவோடு பாரதநாடு—'பழம்பெரு' நாட்டையும் ஒப்பிட்டுப்பாருங்கள்!

இதன் பிறகும் தமிழ்ச்சாதி—

இமயத்தில் புலிக்கொடி பொறித்த கதையும்.

கங்கையும் கடாரமும் வென்ற கீர்த்தியும்.

கல்தோன்றி மண்தோன்றா காலத்து முன்தோன்றிய மூத்த குடி மக்கள் என்ற பழம் பெருமையும் இனவுணர்வும் பேசுவதில் எழுதுவதில் ஏதாவது அர்த்தமுண்டா?

# கண்டோம் கருத்தறிந்தோம்!

ஈழத்து இலக்கிய வரலாற்றில் 1954 — 1956ம் ஆண்டு கால கட்டத்தில் ஈழத்து சஞ்சிகை உலகில் 'உதயம்' சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றி நற்றமிழ் நடையிலான பல உயர்ந்த இலக்கியப் படைப்புக்களை வெளியிட்டு ஒரு புதியசகாப்தத்திற்கு வித்திட்டவரும் கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாக எழுத்துப்பணியில் ஈடுபட்டு சிறந்த எழுத்தாளராகவும் சமயத் தொண்டராகவும் விளங்கும் திரு. வைத்தியலிங்கம் அநவரத விநாயகமூர்த்தி அவர்களை எமது 'சுடர்' சஞ்சிகையின் சார்பில் பேட்டி கண்ட போது அவர் தந்த கருத்துக்களை இங்கு தருவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

கேள்வி:- எழுத்துத் துறையில் எத்தனை ஆண்டு காலமாகப் பணியாற்றி வருகிறீர்கள். சிறுகதை, நாவல், கவிதை, சரித்திரம், ஆராய்ச்சி, விஞ்ஞானம், விமர்சனம், சமயம், தத்துவம் முதலிய துறைகளில் தாங்கள் விரும்பி எழுதி வரும் துறைகளைக் கூறமுடியுமா?

பதில்:- கடந்த 35ஆண்டுகளாக சமயம், சரித்திரம், ஆராய்ச்சி, சிறுகதை, விமர்சனம், இலக்கியம் ஆகிய துறைகளில் எழுதிவருகிறேன். அத்துடன் 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்திலும் அதன் ஆரம்பகாலந் தொடக்கம் அங்கத்தவராக விருந்து பணிபுரிந்து வருகின்றேன்.

கேள்வி:- எழுத்தாளர் என்ற முறையில் உங்களது இலக்கியப் படைப்புக்களைப் பற்றிக் கூற முடியுமா?

பதில்:- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் மாணவனாக இருந்த போது இந்து இளைஞன் என்னும் கல்லூரி, வெளியீட்டுக்கு கட்டுரைகள் எழுதி உதவினேன். மேலும், இந்து சாதனம், ஈழகேசரி, வீரகேசரி, தினகரன், சுதந்திரன், சமூகத் தொண்டன், இலங்கைப் புகையிரதப் பகுதியினர் வெளியிட்ட ஓர் சஞ்சிகை, கலைச்செல்வி முதலிய பத்திரிகைகளிலும் மற்றும் ஈழத்திலும் இந்தியாவிலும் வெளியிடப்பட்ட சிறப்பு மலர்களிலும் எனது கட்டுரைகள், கதைகள் இடம் பெற்றுள்ளன. இலங்கை வானொலியில் எனது கட்டுரைகள் ஒலிபரப்பப் பட்டன. தமிழகத்திலும் ஒன்பதாம் வகுப்புப் பாடப்புத்தகமான 'திரிவேணித் தமிழ்ச் செல்வம்' என்னும் நூலில் எனது கட்டுரை (நயம்படவுரை) இடம்பெற்றுள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

'நவராத்திரியும் கலைமகள் வழிபாடும்' என்னும் நூல் கல்வி அமைச்சு இந்து மன்றத்தின் சார்பில் 1975ல் வெளியிடப்பட்டது. 1976ம் ஆண்டில் மேற்கூறியமன்றத்தின் ஆதரவில் 'கல்விச் செல்வி' என்னும் சிறப்பு மலரைத் தொகுத்து வெளியிட்டேன். வெளிவர விருப்பவை:- 'ஈழநாட்டுப் பைந்தமிழ்ச் சோலை' (கட்டுரைகள்), 'நக்கீரர் தந்த நன் முருகாற்றுப்படை' (ஆராய்ச்சி), ஈழம் அளித்த தமிழ் மணிகள்' (வரலாறு) மேற்கூறியவைகளுள் 'நக்கீரர் தந்த நன்முருகாற்றுப் படை' இந்த ஆண்டின் இறுதியில் வெளிவர விருக்கிறது.

கேள்வி:- தங்களது சொந்தப் பெயரில் தானே படைப்புக்களை வெளியிட்டிருக்கிறீர்கள்?

பதில்:- அநேகமாக எனது சொந்தப்பெயரில் தான் எழுதி வெளியிடுவேன். சில சமயங்களில் 'இணுவை மூர்த்தி' என்னும் எனது புனை பெயரையும் பாவித்திருக்கிறேன்.

கேள்வி:- தங்களை கௌரவ ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த 'உதயம்' மாத சஞ்சிகையைப் பற்றியும் அது எவ்வாறு ஈழத்து எழுத்தாளர்களுக்கு ஆக்கம் அளித்தது என்பது பற்றியும் சுருக்கமாகக் கூறமுடியுமா?

பதில்:- ஈழநாட்டில் தமிழ்பேசும் மக்களிடையே தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம் முதலியவைகளைப் பரப்புவதற்கும் காலத்திற்கேற்ப புதிய கருத்துக்களைக் கொண்ட இலக்கியங்களைச் சிருஷ்டித்து அமிழ்தினுமினிய தமிழ் மொழியை வளர்ப்பதற்கும் போதிய இலக்கிய சஞ்சிகைகள் குறைவாக இருந்த காலத்தில் அக்குறையை நீக்கி செந்தமிழை வளர்க்கும் பணிக்காக 'உதயம்' என்னும் இலக்கிய சஞ்சிகையை 1954ல் உருவாக்கினோம். தமிழ் இலக்கிய வளர்ச்சியையே குறிக்கோளாகக் கொண்டு இலக்கியம், கட்டுரை



திரு. விநாயகமூர்த்தி.

வியாபாரி:- என்ன! கந்தையா நேற்றும் பத்துக் குலை பழமாக கொண்டுவந்து தந்தாய். இண்டைக்கும் ஐந்து பழக் குலையாக கொண்டு வந்து இருக்கிருய்......

தோட்டக்காரன்:, என்ன முதலாளி செய்யிறது உந்த புகை தள்ளுற பழைய பஸ்கள் என்ரை மூன்றுபக்க ரேட்டாலையும் ஓடினுல் வாழக்குலைகள் பழுக்காமல் என்ன செய்யும்.

வியாபாரி:- ......?......!

— மனேன், இடைக்காடு.

கள், இனிய கவிதைகள், சிறுகதைகள், நகைச்சுவைப்பகுதி, பாலர் மன்றம், மாதர் பகுதி முதலிய பல்வேறு அம்சங்களைக் கொண்டு வெளிவந்த 'உதயம்' ஈழத்தில் பல புதிய எழுத்தாளர்களை உருவாக்கியதோடமையாது சிறுகதைப் போட்டி, கவிதைப் போட்டிகளை ஏற்படுத்தி எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு புத்துணர்ச்சியைத் தூண்டிவிட்டது. 'உதயத்தின்' இலக்கியப் பணியைத் தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளும், ஈழத்து சஞ்சிகைகளும் திறம்படப் பாராட்டின. உதாரணத்திற்கு இரண்டு பத்திரிகைகளின் அபிப்பிராயத்தைத் தருகிறேன்.

'இலங்கையில் வெளிவந்த மலர்களில் ஒரு தனி ஸ்தானத்தை உதயம் ஆண்டு மலர் பெறுகிறது.' — வீரகேசரி.

'இணுவை மூர்த்தி அவர்களின் இடையரு முயற்சியால் வத்தளை என்ற இடத்திலிருந்து கடந்த ஓராண்டு காலமாக திங்கள் தோறும் உதயமாகி வந்துகொண்டிருக்கும் 'உதயத்தின்' ஆண்டு மலரைப் பார்த்ததும் தமிழர்களின் இதயங்களில் நீங்காத ஒரு இடத்தை 'உதயம்' பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறது என்ற உண்மை புலப்படுகின்றது.

— சுதந்திரன் (10.7.1955).

கேள்வி:- "உதயம்" என்னும் இலக்கிய சஞ்சிகையை மூன்று ஆண்கள் திறம்பட நிர்வகித்த ஆசிரியர் என்ற முறையில், ஈழத்தில் சஞ்சிகை வளர்ச்சியைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:- ஈழத்திலே தரமான தமிழ்ச் சஞ்சிகைகள் இல்லையே என்ற குறை ஒரு காலத்தில் இருந்தது. அப்போது தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சஞ்சிகைகளே நம் மக்களின் இலக்கிய தாகத்தைத் தணித்து வந்தன. ஆனல் எமது கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கங்களைப் பிரதிபலிக்கும் வண்ணம் பல சஞ்சிகைகள் எமது நாட்டில் ஆங்காங்கே தோன்றி நாலா பக்கமும் பரவி வருகின்றன. ஈழத்து சஞ்சிகை உலகில் இப்போது ஒரு விழிப்புணர்ச்சியையே நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இடையிடையே புதுப்புது சஞ்சிகைகள் தோன்றி இரண்டு மூன்று இதழ்களுடன் மறைந்தாலும் "சிரித்திரன்" "மல்லிகை" போன்ற சஞ்சிகைகள் தொடர்ந்தும் மக்களுக்கு சேவை ஆற்றி வருகின்றன.

கேள்வி:- தங்களுக்கு சமயவிடயங்களில் பெரிதும் ஈடுபாடு இருக்கிறதென நினைக்கிறேன். எந்த வகையில் சமய வளர்ச்சிக்காகப் பணியாற்றியிருக்கிறீர்கள்.

பதில்:- எனது சமய சம்பந்தமான கட்டுரைகள் அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. 1949ம் ஆண்டு தொடக்கம் 1951ம் ஆண்டு வரை வத்தளை - உனுப்பிட்டி இந்து சன்மார்க்க சங்கத்தின் உதவிச் செயலாளராகப் பணிபுரிந்துள்ளேன். மேலும் நான் தற்போது கடமையாற்றி வரும் கல்வி அமைச்சில் இந்து மன்றத்தின் நிர்வாக உறுப்பினராகவும் பொருளாளராகவும் செயலாளராகவும் பணிபுரிந்துள்ளேன். கடந்த நான்கு ஆண்டுகளாக இந்துமன்றத்தின் துணைத் தலைவராக சங்கத்தின் சார்பில் முன்பு கூறியது போல சமய நூல்களை வெளியிட்டது மட்டுமன்றி பாடசாலை மாணவர்களிடையே சமய அறிவைப் பேச்சுப் போட்டிகள் மூலம் பரப்புவதில் முயன்றுவருகிறேன்.

கேள்வி:- தமிழகத்திலிருந்து தமிழ் நூல்கள் சஞ்சிகைகள் இங்கு இறக்குமதி செய்வதற்கு முன்பு தடை விதிக்கப்பட்டிருந்தது. தற்போதைய அரசாங்கம் அந்தத் தடையை நீக்கியுள்ளது. ஈழத்திலுள்ள எழுத்தாளர்களிலும் தமிழ் அபிமானிகளிலும் ஒரு சிலர் ஈழத்து இலக்கிய வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படும் என்ற காரணத்தை வைத்து இதை எதிர்க்கிருர்கள். இது பற்றி தங்கள் கருத்து என்ன?

பதில்:- அறிவு வளர்ச்சிக்கு நூல்களும் சஞ்சிகைகளும் எவ்வளவோ துணைபுரிகின்றன. எனவே தரமான சிறந்த இலக்கிய நூல்களையோ, சஞ்சிகைகளையோ இறக்குமதி செய்வதில் எந்தவித தடையும் இருக்கப்படாது என்பதே என் அபிப்பிராயம். மேலும் நமது ஈழநாடும் தமிழகமும் கலை, கலாச்சாரம், பண்பாடு முதலியவைகளினுல் மிகவும் நெருக்கமாக இணைந்துள்ளன. தமிழகத்து தரமான இலக்கிய நூல்களையும் சஞ்சிகைகளையும் நாம் அன்புடன் வரவேற்கும் அதே நேரத்தில் ஈழத்து எழுத்தாளர்களது சிறந்த படைப்புக்களை அங்குள்ள அன்பர்கள் வரவேற்க வேண்டும். ஆபாசமான அல்லது கீழ்த்தரமான நூல்களாயின் அவை கண்டிப்பாக தடைசெய்யப்பட வேண்டும்.

கேள்வி:- தங்களது பெற்ரேர், சொந்த ஊர், ஆரம்ப கல்வி போன்ற விபரங்களை எமக்குத் தந்துதவ முடியுமா?

(26ம் பக்கம் பார்க்க)

# தந்தை செல்வாவைப்பற்றி

தாமரைக்குளம் செல்லையா

1949ம் ஆண்டு அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு தந்தை செல்வா அவர்கள் இயற்கை எய்தும் வரை அவருடன் மிக மிக நெருங்கிய தொண்டனாகவிருந்து தமிழின விடுதலைக்குத் தம்மாலானபணிகளைச் செய்து வரும் பழம் பெரும் தொண்டர் திரு. ந. செல்லையா அவர்களை (தாரைக் குளம் செல்லையா) அண்மையில் சந்தித்தேன். திரு. செல்லையா அவர்கள் தமிழின விடுதலைப் போராட்டத்தில் தந்தை செல்வநாயகம் அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்த கால கட்டத்தில் தம்மால் மறக்க முடியாத சம்பவம் ஒன்றை இங்கே விளக்குகிறார்.

“1949ம் ஆண்டு தொடக்கம் 1977ம் ஆண்டு பெரியவர் இறக்கும்வரை அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தேன். வாரத்தில் 4 அல்லது 5 தடவையாவது அவரைச் சந்தித்து உரையாடுவேன். அவர் மிகுந்த பொறுமைசாலி. அத்துடன் எதையும் நுட்பமாக அணுகும் ஆற்றல் பெற்றவர். நேர்மையான முறையில் அரசியலை நடத்த முடியும் என்பதையும் அரசியல் சாணக்கியம் என்பது கள்ளத்தனம் அல்ல என்பதையும் எடுத்து விளக்கி தம்வாழ்வில் நிரூபித்துக் காட்டியவர். அத்தோடு அவர் எவரையும் சொல்லால் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெற்றவர்.

1956ம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் திகதி காலிமுகத் திடலில் சாத்வீகப் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் பங்குபற்றுவது தொடர்பாக அன்று காலையிலேயே பம்பலப்பிட்டி விநாயகர் ஆலயத்தில் அனைவரும் கூடி கலந்தாலோசித்தோம். தந்தை செல்வநாயகம் அவர்கள் என்னை அணுகி மூன்று கேள்விகளைக் கேட்டார்.

முதலாவது கேள்வி, “உம்மையாராவது தாக்கினால் என்ன செய்வீர்?” என்றார்.

“கொண்ட இலட்சியத்திற்காக அதை நான் சகிப்பேன்” என்றேன்.

இரண்டாவது கேள்வி, “உமக்குப் பக்கத்தில் இருப்பவரை யாராவது தாக்கினால் என்ன செய்வீர்?” என்றார்.

“இலட்சியத்திற்காக அதையும் சகிப்பேன்” என்றேன்.

மூன்றாவதுகேள்வி, “தலைவன் மீது நம்பிக்கையுள்ளவன் நீர், உமது தலைவனை யாராவது தாக்கினால் என்ன செய்வீர்?” என்றார்.

எனக்கு என் உடலே பதறியது. வார்த்தைகள் தடுமாறின. அப்போது தந்தையவர்கள் பின்வருமாறு கூறினார்;

“ஒரு விடுதலை இயக்கத்தில் வழி நடத்தப்படுபவர் மட்டுமல்ல, வழி நடத்துபவரும் தொண்டரே. ஆகையால் உமது தலைவருக்கு அடி விழுந்தால் அதையும் நீர் இலட்சியத்திற்காகச் சகிக்க வேண்டும். அப்படி உம்மால் சகிக்க முடியுமாயின் நீர் இப்போராட்டத்தில் பங்கு பற்றலாம்” என்றார் நானும் உடன்பட்டேன்.

காலிமுக மைதானத்திற்குச் சிலர் பேருந்து வண்டியிலும் சிலர் மோட்டார் வாகன மூலமும் சென்றோம். நாம் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது 400க்கு மேற்பட்ட சிங்களக் காடையர்கள் காலஞ்சென்ற சோமவீர சந்திரசிறி, கே. எம். பி. இராஜரத்தினா, அப்போதைய மாத்தளை பா. உ. மைல் கருணாதிலக ஆகியோர் தலைமையில் எம்மை நோக்கி வந்தார்கள்.

### பெரியவர் பெருந்தன்மை

பெரியவர் எந்த விடயத்திலும் பெருந்தன்மையாய் நடந்து கொள்பவர். தான் உருவாக்கிய தனது ஸ்தாபனமாகிய சுதந்திரன் அலுவலகத்திற்கு வரும் பொழுது அங்குள்ள தொலைபேசியை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், “நான் இந்த டெலிபோனை உபயோகிக்கலாமா?” என்று ஆசிரியரிடமோ, அல்லது அச்சகப் பொறுப்பாளரிடமோ கேட்டுவிட்டே உபயோகிப்பார்.

# அண்ணாவும் ஜின்னாவும்

இந்திய உபகண்டத்தின் ஒரு பகுதியில் தனியான பிரதேசமும் மொழியும், பண்பாடும் கொண்டு தனியான ஒரு தேசிய இனமாக திகழ்ந்த மக்களுக்கு பூரண சுதந்திரம் கொண்ட ஒரு தனிநாடு அமைப்பதற்கு சகல வழிகளிலும் உரித்துரிமையுண்டு என வாதாடி அவர்களுக்கெனத் தனது உறுதியான கொள்கையால் விடாப்பிடியாக நின்று பாகிஸ்தானை உருவாக்கிக் கொடுத்த ஜின்னா அவர்கள் தென்னக மக்களின் திராவிட நாட்டுக் கோரிக்கையிலும் அதிக அக்கறை கொண்டிருந்தார். ஜின்னா அவர்கள் பெரியார் ஈ.வே.ரா.அவர்களைச் சந்திக்கும்போதெல்லாம் அவரிடம் திராவிட நாட்டுக் கோரிக்கை பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வார். ஜின்னா அவர்கள் பெரியாரைச் சந்திக்கும் போதெல்லாம் அவர் கூடவேயிருந்த அண்ணாவையும் காணத் தவறுவதேயில்லை. ஒரு நாள் அண்ணாவை பார்த்த ஜின்னா பெரியாரை நோக்கி, "யார் இவர்? இவருடைய பரந்த நெற்றியையும் அடர்த்தியான புருவங்களையும் குறுகுறுத்த விழிகளையும், அறிவு ஒளி வீசும் முகத்தையும் பார்த்தால் என்றோ ஒரு நாள் இவர் முழு ஆசியாவையுமே ஆட்டிப்படைப்பார் போலிருக்கே" என்றார்.

இதற்குப் பெரியார் ஈ.வே.ரா. அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்.

ஆமா இந்தப் பையன் எங்க பையன் தானுங்க! நல்ல அறிவும் ஆற்றலும் உள்ள கெட்டிக்காரப் பையனுங்க" என்றார்.

பெரியார் ஈ. வெ. ரா. ஜின்னாவிடம் தமிழில் கூறிய இந்த வார்த்தைகளையெல்லாம் ஜின்னாவுக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறியவர் யார் தெரியுமா? கூடவேயிருந்த அறிஞர் அண்ணாதான்

-தகவல்: பொன். பூலோகசிங்கம்,
கொழும்பு வளாகம்.

---

இவ்வேளையில் தந்தையவர்களின் மைந்தன் வசீகரன் மோட்டார் வாகனத்தில் மைதானத்திற்கு சத்தியாக்கிரகிகளை ஏற்றிக் கொண்டு வந்தார். காடையர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு தாக்கினார்கள். வசீகரன் ஒருபுறம் தாக்கப்பட மறுபுறம் சத்தியாக்கிரகிகளுக்கு தாக சாந்திக்காக பழச்சாறு கொண்டு வந்த தந்தையின் மற்றொரு மகனான மனோகரன் தாக்கப்பட்டார். இச்சந்தர்ப்பத்தில் தான் தந்தை அவர்களின் பொறுமையை — சகிப்புத் தன்மையைக் கண்டேன். தம் கண்முன்னே தம் மைந்தர்கள் தாக்கப்படவும் தந்தையவர்கள் தம்பிள்ளைகளைப் பற்றிக்கவலையுறாது, தம்முடன்கூட இருந்த சத்தியாக்கிரகிகள் மேற்படி நிகழ்ச்சியால் பொறுமையிழந்து விடுவார்களோ எனப் பயந்து தந்தையவர்கள் சத்தியாக்கிரகிகளை நோட்டம்விட்ட வண்ணமேயிருந்தார். தந்தையின் செயலைக் கண்டு பூமாதேவியே கண்ணீர் விடுவது போல மழை பொழியத் தொடங்கியது.

அத்தோடு தந்தை செல்வாவிடம் ஒரு அபார சக்தி — அதை தெய்வீக சக்தி என்றும் கூறலாம் — காணப்பட்டது. இக்கொடூர தாக்குதலின்போது400கு மேற்பட்ட காடையர்கள் சத்தியாக்கிரகிகள்மீது நூற்றுக்கணக்கான கற்களால் எறிந்தார்கள். பெரும் பொல்லால் அடித்தார்கள். சத்தியாக்கிரகிகள் மீது சிறுநீர் கழித்தார்கள், ஆனால் தந்தை மீது எறியப்பட்ட கற்களோ அவர் மீது ஓங்கப்பட்ட அடியோ அவர் மீது படவில்லை. அத்தனையும் அவரை அணுகாது யாவும் வெவ்வேறுதிசையை நோக்கித்தான் போய் விழுந்தன. ஆரம்பம் தொட்டு முடிவுவரை தொண்டருள் தொண்டனாகவிருந்து சாத்வீகப் போரில் ஈடுபட்ட அவருக்கு ஒரு காயமும் ஏற்படவில்லை. இதை அவரிடம் இருந்த தெய்வீக சக்தி என்றுதான் கூற வேண்டும்" என்றும் தாமரைக்குளம் செல்லையா அவர்கள் மேலும் குறிப்பிட்டார்கள்.

செவ்வி கண்டவர்:-
பொன். பூலோகசிங்கம்,
(கொழும்பு வளாகம்)

# ஒரு தமிழ் கிராமம் அழிந்துவிட்டது

**கதிர்—நவம்**

**அது** ஓர் அசல் தமிழ்க்கிராமம். பண்டாரவன்னியன் பைந்தமிழ் ஆட்சியிலே செந்தமிழ் பாடிப் பலபேர் போற்றிடப் புகழோடு தமிழர்கள் வாழ்ந்த மண் அது. ஆனால் அது இப்போது தமிழ்கிராமம் அல்ல. பலவருடங்களுக்கு முன்னர்தான் தமிழன் பூமியாக தமிழ் பண்பாடு, கலைகலாச்சாரத்துடன் இருந்த கிராமமாக அது இருந்தது. அந்தக் கிராமத்தின் ஊடாக நான் சென்றுகொண்டிருக்கிறேன். தமிழ்க்கீதம் ஒலித்துக்கொண்டிருந்த அந்த மண்ணிலே—தமிழன் ஆடிப்பாடித் திரிந்த அதே மண்ணிலே, புதிய மனிதர்கள்......... புரியாத மொழி வாழ்ந்து கொண்டிருப்பதைக் கண்டேன். இந்த மண் எப்படி இவர்கள் கைக்கு மாறியது? நான் சிறிது சிந்தனையைத் தூண்டிவிட்டேன். போரிலே அந்தத் தமிழர்கள் அழிந்தார்களா? நோயினால் அவர்கள் அழிந்தார்களா? இந்த மண்ணை விட்டு ஏன் தமிழன் வெளியேறினான். விபரமே தெரியவில்லை. எப்படியாவது அறிந்திடவேண்டும் என்ற ஆவல் மட்டும் என் இதயத்திலே எழுந்தது.

தேடினேன்......... அந்த மண்ணிலே வாழ்ந்த ஒருவனையாவது தேடிப் பிடிக்க வேண்டும். அந்த மண் மாற்றான் கைக்கு மாறியகாரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆவலில் தேடினேன். சந்தித்தேன் ஒருவரைப் பலநாள் முயற்சியின் பின். நரைத்ததலை தளர்ந்த உடம்பு, ஒளி குறைந்த கண்கள், இருந்தாலும் தமிழனுக்கே உரிய அந்தப் பண்பாடு, வளைந்த மார்பு, நிமிர்ந்த தலையுடன் கம்பீரமாகக் காட்சியளித்த அந்தப் பெரியவரை அணுகினேன்.

ஐயா நீங்கள் பிறந்து வளர்ந்த மண்ணிலே இன்றைய நிலையைக் கேட்டீர்களா? அந்தத் தமிழ்க் கிராமமே இன்று உருமாறிப் பெயர் மாறி வேறு ஓர் இனம் வாழும் கிராமமாகிவிட்டதைக் கண்டீர்களா? பண்டாரவன்னியன் பரம்பரையில் வந்த நீங்கள், ஒரு பிடி மண்ணைக்கூட என் உயிர் உள்ளவரை விட்டுக்கொடுக்க மாட்டேன் என்று சபதம் கூறிப் போராடிச் சதியாலே தோல்வியுற்று உயிரைப் பறிகொடுத்தவன் பண்டாரவன்னியன் என்பதை மறந்து, ஒரு தமிழ்க்கிராமத்தையே தாரைவார்த்துக் கொடுத்துள்ளீர்களே மற்றொரு இனத்துக்கு. இதை எப்படி ஐயா மனம் வந்தது செய்தீர்கள். உங்களுக்கு மொழிப் பற்றில்லையா? மானமில்லையா? நீங்கள் தமிழினத்தில் பிறந்த கோடாரிக் காம்புதானா? நான் உணர்ச்சிவசப்பட்டு வாயில் வந்ததையெல்லாம் கூறிக்கொண்டே போனேன். தம்பி நிறுத்து...... அந்தப் பெரியவர்தான் கத்தினார்.

## மேதைகளின் வாழ்வில்

ஷேக்ஸ்பியரைப்பற்றிக் குறைகூறிக் கொண்டிருக்கும் பெர்னாட்ஷாவை மட்டம் தட்ட வேண்டும் என்ற கருத்தில் ஷேக்ஸ்பியரின் அபிமானிகள் ஒரு கூட்டம்கூட்டி அதில் ஷாவையும் பேச அழைத்திருந்தனர்.

ஷா நல்ல நகைச்சுவையுடன்தான் பேசினார். என்றாலும் வேண்டும் என்றே ஒருவரும் அவர் பேச்சைக் கேட்டு கை தட்டவில்லை. அத்துடன் தலைமை தாங்கியவரும் ஷாவைப்பற்றி கிண்டலாக பேசினார்.

ஷேக்ஸ்பியர் அபிமானிகள் கைதட்டிச் சிரித்தனர் ஷாவுக்கு சரியான மூக்குடைப்பு என்று முணுமுணுத்தனர்.

பெர்னாட்ஷா எழுந்து நின்று பேசினார்.

"ஷேக்ஸ்பியர் அபிமானிகளே! நான் இப்போது பேசிய நகைச்சுவைப் பேச்சு சுவையாக இல்லை என்று குறை கூறப்படுகிறது. இப்போது பேசியது என் சொந்த நகைச்சுவையல்ல; ஷேக்ஸ்பியரின் காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் ஷேக்ஸ்பியரின் சொந்த நகைச்சுவைதான் அது! உங்களுக்கு சிரிப்பு வராததற்கு நான் பொறுப்பாளியல்ல"

ஷேக்ஸ்பியரின் அபிமானிகள் முகத்தில் ஈயாடவில்லை.

அதற்குமேல் அவரால் பேசமுடியவில்லை. கண்ணீர் பெருக அவர் நின்ற கோலத்தைப் பார்க்க எனக்கு உடலெல்லாம் ஏதோ செய்வதுபோலிருந்தது.

அவர் தொடர்ந்தார் நான் அன்று இருந்த நிலையை அறிந்தால் இப்படியெல்லாம் கேட்டிருக்க மாட்டீர். அந்த மண்ணை நானும், எனது உறவினர்களும் விலைபேசி விற்கும் போது கூட அழுதழுது தான்விற்றோம். அவர் இடையில் நிறுத்தி ஏதோ சிந்தித்தார். பாட்டியிடம் கதை கேட்டும் குழந்தை போல் அவர் முகத்தையே பார்த்த வண்ணமிருந்தேன்.

தம்பி அன்று உடையார்—விதானைமாருக்கு அதிகாரம் கூட. அவர்கள் இட்டதுதான் சட்டம். அவர்கள் செய்வதுதான் சரி. அதைத்தான் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். அந்தக் கிராமத்திலே வாழ்ந்த நாங்கள் சிறுபான்மைத் தமிழர்கள். உடையாருக்கும்—விதானையாருக்கும் நாங்கள் சேவை செய்ய வேண்டும். எங்களுக்குக் கிடைக்கும் வருமானத்தில்கூட அவர்கள் கேட்பதைக் கொடுக்க வேண்டும். இல்லையேல் அவர்களுக்குக் கோபம் வந்து விடும். எளிய சாதிகளே எங்கடை சொல்லைக் கேட்கமாட்டீர்களா? என்று ஏதாவது பொய் வழக்குகள் போட்டுத் தண்டனை வாங்கிக் கொடுப்பார்கள். எங்கள் மாடுகளை இரவோடிரவாகக் கடத்திச் செல்வார்கள். பணம் வைத்திருப்பவர்களிடம் கொள்ளையடிப்பார்கள். குளத்திலே நீர் இருந்தால் குளக்கட்டுகளை வெட்டி விடுவார்கள்இவற்றையெல்லாம் சட்டத்தின் முன் நாங்கள்கொண்டு வந்தால் எங்கள் இனத்தில் ஒருவனையே குற்றவாளியாக்கித்தண்டனைகொடுப்பார்கள். இவைளுக்கு பயந்து அவர்களுக்குச் சேவை செய்தவர்கள்தான் நாங்கள். எவ்வளவு காலத்துக்குத்தான் சேவை செய்யமுடியும். எங்களுக்கென்றொரு வாழ்க்கை, எங்களுக்கென்றொரு குடும்பம் இருக்கத்தானே வேண்டும். இதனால் அவர்களை எதிர்த்தோம். வந்தது வினை. அநியாயங்கள் தொடர்ந்தன. வெளியில் தலை காட்டமுடியாதநிலை. கொலைகொள்ளை கற்பளிப்புகள்...... தெருவில் போகும் சொறி நாயைக் கண்டவுடன் சிறுவர்கள் கல்லெடுத்தெறிவதுபோல், எங்களைக் கண்டதும் எறிந்து கலைப்பார்கள். எங்களால் வாழமுடியவில்லை. இறுதி முடிவு நாங்கள் எளியசாதிகள்—அவர்கள் உயர்ந்த சாதிகள். அவர்கள்தொகை அதிகம்—நாங்களோ சிறிதளவு, அரசாங்கம் அவர்கள் கையில்—எங்களால் என்ன செய்ய முடியும். சிறுபான்மையென்றால் அவர்கட்கு அடிமைதானு? காணிகளை விலைபேசுகிறும் ஒரு தமிழன்கூட வாங்க முன்வரவில்லை. முடிவு மற்றொரு இனத்தவனுக்குக் காணி விலையாயிற்று. தமிழனே எங்களைக் கலைக்கும்போது எம்மால் என்ன செய்ய முடியும்? நீரே சொல்லும் தம்பி? கேள்விக்குறியோடு நிறுத்தினர் பெரியவர்.

அவர் கேள்விக்கு என்னுல் பதில் சொல்ல முடியவில்லை. அவர் சொல்வதில் நியாயம் இருக்கத்தானே செய்கிறது. தமிழனே தமிழனை பிரித்து ஒதுக்கும் போது ஒதுக்கப்படும் தமிழன் யாரிடம் போய் அடைக்கலம் பெறுவது. ஆமாம் அந்தச் சாதி வெறி பிடித்தவர்களால் ஓர் தமிழ் கிராமம் அழிந்து விட்டது. பெரியவரிடம் விடை பெற்றேன். அவர் கேள்விக்குப் பதில் கூறுமலே............

(கற்பனை கலந்த உண்மை)

## படித்து சுவைத்தது

நாட்டின் உயர்விற்காக உழைப்பதிலும் போராடுவதிலும் சாவதிலும் தனியின்பம் இருக்கிறது அந்த இன்பத்தை நாம் ஒன்ருக பகிர்ந்து கொண்டால் என்ன? உண்மையான அன்பு ஒருபோதும் கடமைக்கு குறுக்கே நிற்காது. செயலாற்றும் சக்தி அன்பினுல் அதிகரிக்கு மென்றே நம்புகிறேன்.

—நெஞ்சின் அலைகள் என்னும் அகிலனின் புத்தகத்திலிருந்து —

தொகுப்பு-: சாந்தையூர் சக்திவேல்




தந்தையே ஈழத்தமிழர் தவப்பேறாய்
வந்தே எமக்கோர் வழியமைத்துத் — தந்தாயே!
அவ்வழியில் நம்மை இனி அழைத்துக் கொண்டேகுபவர்
எவ்வெவரோ அறிவார் எவர்?

இன்னுமோர் ஆறாண்டிருப்பேன் என உறுதி
சொன்னாயே உந்தனது சொற்கணக்கின் — முன்னேயே
அங்கழைத்துக்கொண்டானே அக்கிரமக்கார யமன்
இங்கென்ன செய்வோம் இனி?

மூதறிஞராயிருந்து மூதுரைகள் தான் தந்த
நீதறியா எங்களருஞ் செல்வாவே! — ஏதறிவோம்
இனிமேல் அறிவுரைகள் இயம்புவதார் உன்னைப்போல்
தனிஉரையே உந்தனுரை தான்!

மாசு மறுவற்றே மாற்றாரையும் போற்றும்
ஏசுபிரானாய் இருந்தாயே! — பேசுமொழி
போனால் இனமழியும் போற்றுங்கள் என்றுரைத்துப்
போனாயே எங்கே புகல்?

நீதி தியாகம் நேர்மை பொறுமையெலாம்
ஓதியே வந்ததுடன் ஒவ்வொன்றும் — சாதித்தே
தமிழர் முரசாகித் தமிழ்மண வரப்பான
சமயத்தில் வந்ததோ சா?

கண்ணீர் துடைத்தெழுந்து கால் தூக்கி உந்தனது
பொன்னான பாதையிலே போவதற்கு — என்னாளும்
எந்தத் தொலைவில் இருந்தாலும் எம்செல்வா
வந்தெம்மை ஆசீர்வதி!

"தாமரைத்தீவான்"




மேற்கு வானம் வர்ண ஜாலம் காட்டத் தொடங்கி விட்டது. நீலப் பட்டாடையைக் கட்டிக்கொண்டிருந்த வானத்துக்கன்னி,கீழாடையை மாற்றி மஞ்சள் ஆடையை உடுத்தாள். சிலநிமிடநேரம் கழிந்திருக்கும். அதுவும் அவளுக்குப் பிடிக்கவில்லைப் போலும் சிவப்பு ஆடை, மஞ்சள் கோலங்கள், நீலக்கரை எத்தனை வகைவகையான ஆடைகளைத்தான் அவள் மாற்றி மாற்றி........

மாலைப் பொழுதின் மயக்கத்தில் திளைத்துக் கொண்டு நிற்கிறேன். கடற்காற்று "சர்" என்று வீசி புதிய உணர்வுகளைத்தருகிறது. கரையில் கிடந்த இராவணன் மீசை என் வேட்டியைப் பற்றி இழுக்கிறது;

பக்கத்தில் பாழடைந்த அம்மன் கோயில். அடுத்தாற்போல் பரந்து கிடக்கும் தென்னந்தோட்டம். வரிசையாக நிற்கும் அந்த வயதாகிவிட்ட தென்னை மரங்களில்அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில காய்கள்.

இத்தச் சூழல்தான் எனக்கு எவ்வளவு பழக்கமானது. நான் சிறுவனாக இருந்த அந்த நாட்களில் எத்தனை மாலைப் பொழுதுகளை இந்த இயற்கையுடன் ஒன்றிப்போய் கழித்திருக்கின்றேன். காலத்தின் சுவடுகள் எத்தனை மாற்றங்களைப்பதித்து விட்டுச்சென்றுவிட்டன,

கடற்கரையில் கட்டப்பட்டிருந்த மீன்பிடி வள்ளத்தில் ஏறி அமர்ந்து கொள்கிறேன். மனம் இன்பத்தில் துள்ளுகிறது. இன்பத்தில் மட்டுமே என் மனம் துள்ளிய அந்த நாட்கள். வாழ்க்கைப் புத்தகத்தின் சுவையான அத்தியாயங்கள் பள்ளிக்கூடம் முடிந்து வீட்டுக்கு வந்ததும் வராததுமாக அம்மாவிடம் கோயிலுக்குப் போகப்போவதாகக்கூறுவேன். அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருக்கும்.

கடற்கரையில் வந்து சிப்பி பொறுக்குவேன். மீன்பிடி வள்ளத்தில் அமர்ந்து கொண்டு கூடவரும் நண்பர்களுடன் ஆடி ஆடி...... வள்ளத்தைச் சிறிது தூரம் ஓட்டிச் செல்வேன். என்னை மறந்து மேற்கு வானத்தின் வர்ணஜாலத்தில் மனதைப் பறிகொடுத்து அமர்ந்திருப்பதில் எனக்கு அலாதி ஆசை. ஏனென்று புரிய முடியாத அப்படி ஒரு ஆசை.

கோயிலுக்கும் போக மறக்கமாட்டேன். மற்றச் சிறுவர்களெல்லாம் விழுந்து விழுந்து கும்பிடுவார்கள். என்னவோ தெரியவில்லை.எனக்குஅதிலெல்லாம் மனம் செல்லவில்லை. நல்லவர்கள் எல்லாம் கடவுளுக்குச் சமம் என்று தான் நினைப்பேன். கோயிலை விட்டுப் போகும்போதுபட்டைபட்டையாக திருநீற்றைப் பூசிக் கொண்டு போக மறக்கமாட்டேன். அப்படியே முன்னால் போய் நிற்கும்போது என்னைப் பார்த்து அம்மா எவ்வளவு மகிழ்ச்சியடைந்தாள். அம்மா என்னால் மகிழ்ச்சியடைய வேண்டும். என்பதில் எனக்கு மிகுந்த ஆசை.

கம்பிவேலியைப் பிரித்து தென்னை மரங்கள் நிறைந்திருக்கும் அந்த வளவுக்குள் போவோம்.எங்களில் ஒருவருக்கும் மரமேறத்தெரியாது. சில நாட்கள் திராட்சைப் பழத்தைக் கண்ட நரியாகவும் சென்றிருப்போம். தப்பித் தவறி நாங்கள் வளவுக்குள் நிற்கும் போது செல்லன் வந்துவிட்டால் கடவுள் வந்தமாதிரித்தான்.

செல்லன் மரமேறும் தொழில் செய்பவர். என்மீது அவருக்கு நல்ல விருப்பம். ஒரு நாளில் செல்லன் கூலிக்கு எத்தனை மரம் ஏறுகிறார். அப்படிப் பார்த்தால் அவருக்குகஷ்டமே

### உலக மொழிகள்

| | கோடி |
|---|---|
| சீனம் | 55·5 |
| ஆங்கிலம் | 35·0 |
| இந்தி | 23·0 |
| ஸ்பானிஷ் | 22·0 |
| அரபு | 15·0 |
| உருசியன் | 14·0 |
| போத்துக்கீஸ் | 11·0 |
| யப்பான் | 10·7 |
| ஜெர்மன் | 10·5 |

தகவல் — திருமகள்

இருப்பதற்கு நியாயமில்லை. ஆனால் ஏனோ தெரியவில்லை செல்லன் பஞ்சத்தில் அடிபட்ட கோலத்துடன் தான் இருப்பார். வரண்ட தலை, ஒளியிழந்த கண்கள், வற்றிய வயிறு, முன் தள்ளிய நெஞ்சக்கூடு இதுதான் செல்லனின் நிலை.

ஒரு மரத்திலே இத்தனை தேங்காய் பிடுங்கிவிடும் செல்லனுக்கு கூலி இருபத்தைந்து சதம்தான். அதனால் தான் தோட்டத்துக்குச் சொந்தக்காரர் காரில் வருகிறார். செல்லன் சைக்கிள்கூட இல்லாமல் ............

செல்லனின் வீடு எங்களது வீட்டிலிருந்து அரைமைல் தூரத்தில்தான் இருக்கிறது. அவரது வீட்டைச்சுற்றி இருப்பவர்கள் எல்லாரும் மரம் ஏறுகிறவர்கள்தான். அவர்களில் யாரும் எங்க வீட்டுக்கு வந்தால் அம்மா உள்ளே விடமாட்டாள். செம்பில் தண்ணீர் கூடக் கொடுக்கமாட்டாள். நான் அம்மாவோடு சண்டை பிடிப்பேன் அவர்களும் மனிதர்கள்தான் என்று. என்ன பிரயோசனம்? அம்மா கேட்கிறதேயில்லை. இப்படியெல்லாம் அம்மா அவமானப் படுத்தவும் செல்லன் எனக்கு ஏன் இவ்வளவு உதவி செய்கிறார். கேட்டுக் கேட்டு இளநீர் பிடுங்கித் தருகிறார். நினைக்கும் போது செல்லன் மீது எனக்குக் கோபம் வரும், இளநீரின் மீதுள்ள ஆசை அதையெல்லாம் போக்கிவிடும்.



போகப் போகத்தான் எனக்குப் புரிந்தது. செல்லன் என்மீது விருப்பப்படுவது...... இளநீர் பிடுங்கித்தருவது அன்பினால் அல்ல. காலம்காலமாக ஊறிவிட்ட அடிமைத்தனத்தால்...... செல்லன் மீது எனக்குக்கோபம் கோபமாக வந்தது என் தந்தையின் வயதையொத்த அவரை நானல்லவா மதிக்கவேண்டும்? மாறாக அவர் எனக்கு மதிப்பளித்து........... பணிந்து...... தானாகவே முன்வந்து இளநீர் பிடுங்கித்தந்து அவரைக்காணவே எரிச்சலாக இருந்தது.

இந்த எண்ணங்கள் மனதில் முகிழ்த்ததும் நான் கோயில் பக்கம் போவதை நிறுத்திவிட்டேன். ஆனால் மேற்கு வானத்தின் வர்ண ஜாலங்களை மறந்துவிட முடியவில்லை. செல்லனின் அடிமைத்தனத்தை என்னால் சகிக்க முடியாது. அதுவும் ஒருவகைசுரண்டலாகவே எனக்குத் தோன்றியது. இருந்தாலும் என் மனதில் தாங்கமுடியாத ஒரு குறை அந்த மேற்கு வானத்தின் வர்ண ஜாலங்கள் ரசிகனில்லாத நாடகமாக மேடையேறிக் கொண்டிருந்தது.

இன்று!

எல்லா நாளுக்குமாகச் சேர்த்து வானத்துக் கன்னியை ரசித்துக்கொண்டிருந்தேன். இடையில்தான் எத்தனை வருடங்கள்.

விடுமுறையில் ஊருக்கு வந்து நின்ற போது அம்மா தான் நினைவு படுத்தினாள்: “கோயிலுக்குப் போகவில்லை

யர்டா?" வானத்தின் வர்ண ஜாலம்! 'சர்' என்று வீசும் கடற்காற்று என்மனதில் அந்த இயற்கையில் லயிக்கும் ஆவல் இடையில் ஒரு தடம் செல்லன் ஓ...... அவர்தான் இறந்துவிட்டாரே...தனியாகவே விரைந்து வந்துவிட்டேன்.

இளநீர் குடிக்கவேண்டும் போல் ஒரு ஆசை. கம்பிவேலிகள் எல்லாம் உடைந்து கிடந்ததால் சிரமப்படாமல் வளவுக்குள் வந்தேன். தூரத்தில் நாலைந்து இளைஞர்கள் நின்றார்கள். என்னிலும் பார்க்க ஐந்தாறு வயது இளையவர்கள். மனதுள் ஒரு நம்பிக்கை, எப்படியும் அவர்கள் மூலமாக இளநீர் பெற்றுவிடலாம். தேவை ஏற்படும் போது எப்படியோ அந்த சுரண்டும் புத்தி ஏற்பட்டு விடுகிறது,

அந்த இளைஞர்கள் செல்லனின் பகுதியைச் சேர்ந்தவர்கள். சிறுவர்களாக இருக்கும் போது கண்டதாக ஞாபகம். ஒல்லியாக வளர்ந்திருக்கும் அவன் செல்லனின் மகன். "நீ செல்லன்ர மகன்தானே"பேச்சைத் தொடக்குவதற்கான முயற்சி. "நீங்க கந்தையற்றை மகன்தானே" எதிர்க் கேள்வி கேட்டான் அவன். "உங்களை யாரு தேங்காய் பிடுங்கச் சொன்னது?" அப்படிப் பயமுறுத்தியாவது இளநீர் பெற்றுவிடும் முயற்சி.

"ஏன் உங்கட காணியோ?" "தேங்காய் பிடுங்கினதைக்கண்டனீரோ" பயமற்ற பதில்கள் "இளநீர் பிடுங்கித்தா" அதட்டலுடன் கூறிப்பார்த்தேன் "உமக்கு நாங்களென்ன அடிமையா? "என்று அலட்சியமாகக் கூறிவிட்டு என்னைப் பாருட்படுத்தாமல் நடந்தார்கள்.

நான் சிறுவனாக இருக்கும் பாதே என்னைக் கண்டு செல்லன் எவ்வளவு பணிந்தான். எவ்வளவு மதிப்பளித்தான்: 'ன்று அவன் மகன்? காலத்ன் மாறுதல்கள்...... இளைய லைமுறை விழிப்படைந்துட்டது எனக்கு மகிழ்ச்சியாக்ருந்தது. அந்த அடிமைகள் செல்லனின் தலைமுறையுடன் செத்துவிட்டார்கள். புதிய தலைமுறையினரை யாரும் ஏமாற்றி சுரண்டிவிட முடியாது. மாறுதல்களைக் கண்டு இன்பத்தில் என் இதயம் விம்முகிறது.

(யாவும் கற்பனை)

---


# கதை,
# கவிதை,
# கட்டுரை,
# நாவல்,
# பேனநண்பர்தொடர்பு

ஆகியவற்றில் ஆர்வம் உள்ளவர்களுக்கு சிறந்த உறுதுணை செய்கிறது

## "அறிவமுதம் நண்பர்கள் கழகம்"

இலவச விபரங்களைப்பெற, சுயவிலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டிய கவர் ஒன்றை அனுப்பிவையுங்கள்.

முகவரி:
"அறிவமுதம்"
ஆசிரியர் ஜி. ஏ. ராஜ்கண்ணன்
பெருங்குளம்
சாவகச்சேரி



'சுள்' என்று சுட்டுக் கொண்டிருந்த நடு உச்சு வெய்யிலிலே தலைச் சுமையாக உப்புக் கூடைகளைச் சுமந்து தான் போடவேண்டிய கணக்குக்கு போட்டு விட்டாள் பொன்னம்மா—கோடை வெய்யிலே காய்ச்சப்பட்டுவிட்ட உப்புத் தண்ணீரின் பிசுபிசுப்பு அவள் கால்களை வேறு அரித்துக் கொண்டிருந்தது. மன்னர் உப்பளத்தின் அலுவலகத்தின் அருகாக இந்தப் பூவரசு மரநிழலில் வந்து "அப்பாடா" என்று அலுத்துக் கொண்டவளாக கால்களை நீட்டியபடி உட்கார்ந்து கொண்டாள். இடுப்புத் தொடங்கி உள்ளங்கால் வரை உளை உளை என்று உளைவெடுத்து பிடரி நரம்புகள் வேறு 'விண், விண்' என்று வலித்தன. அவளது மரத்துப் போன கைகளால் தொடை தொடங்கி உள்ளங்கால் வரை அமுக்கிக் கொண்டாள்.

வயிற்றுப் பிள்ளைத் தாச்சியான அவளின் இந்தச் செய்கைகள் யாவையும் கவனித்துக் கொண்டிருந்த செல்லையாக்கிழவனுக்கு இரக்கமாக இருந்தது. ஒரு காலத்தில் 'துரு துரு' வென்று துடுக்குமிகுந்தவளாக, எடுப்பான உடலமைப்பும் எவரையும் இலகுவில் கவர்ந்து கொள்ளக் கூடிய வசீகரமும் கொண்டவளாயிருந்த பொன்னம்மாதானா இது என்று அவரால் நம்பமுடியாமல் இருந்தது.

கறுப்பிதான் என்றாலும் கன்னியாக இருந்த பொழுது கடைந்தெடுத்த சிலை மாதிரியல்லவா இருந்தாள்! இன்று காலதேவனின் கை வண்ணங்களாக கடும் உழைப்பும், வறுமையுமாகச் சேர்ந்து ஒட்டி உலர்ந்த, மேனியும், உட்குழி விழுந்து விட்ட கண்களுமான அவள், காணும் தோற்றம் வயது முப்பத்தைந்தை எட்டா விட்டாலும் பார்ப்பவர் நாற்பத்தைந்தை மதிக்கக் கூடிய விதத்தில் காட்சியளித்தாள்.

பத்து வருடங்களுக்கு முன்பு அவளிருந்த நிலைமையையும், இன்று அவளுக்கு ஏற்பட்டு விட்ட கதியையும், எண்ணிப் பார்த்த அவரிடமிருந்து அனுதாபத்தோடு கூடிய பெருமூச்சுக் கிளம்பியது.

செல்லையாவின் பெருமூச்சைக் கேட்டு நிமிர்ந்து அவரைப் பார்த்த பொன்னம்மா என்ன நினைத்துக் கொண்டாளோ அமைதியான சிரிப்பொன்றை உதிர்த்தாள். அது அவர் கொண்ட அனுதாபத்துக்கு நன்றி கூறுவது போலிருந்தது.

''பொன்னம்மா, இந்த நிலைமையிலும் நீ உப்புச் சுமக்கத் தான் வேணுமா? இப்படி உடம்பைப் போட்டு முறிச்சா அது என்னத்துக்கு ஆகும்'' என்றார் கிழவர்.

"என்னப்பு செய்யிறது நான் கஷ்டப்பட்டு உழைச்சால் எனக்கு மட்டும்தான் கெடுதி ஆனல் நான் இதுவும் செய்யாட்டி நானும் என் நாலு பிள்ளைகளும் பட்டினி கிடந்தல்லா சாக வேணும்"

"ஏன் பிள்ளை இவன் அழகராசா உழைக்கிற தெல்லாம் என்ன செய்யுறான் - வீட்டில் உனக்கும் பிள்ளைகளுக்கும் கொண்டுவந்து தரமாட்டானா?"

"அவர் எங்கையப்பு தொழிலுக்குப் போறதே குறைவு; அப்பிடிப் போனலும் அவர் கொண்டுவாறது அவருக்குக் குடிக்கத்தான் போதும். சில நேரத்தில் மட்டும் கறிக்கு மீன் கொண்டு வருவார். எல்லாம் என்ர தலையெழுத்து." என்று கூறும் பொழுது அவளை யறியாமலே அவளுக்கு சலிப்பு உண்டானது.

"ஏன் உன்ர மூத்தவன் தொழிலுக்கு போறதில்லையா"

"அவனுக்கு என்ன வயசு, ஆக பன்ரெண்டு ஆகுது; நான் இருக்கிற நிலையில அவனைப் படிப்பிக்க ஏலுமா நானகத் தான் படிப்பை நிப்பாட்டிட்

டன் இப்ப கொஞ்ச நாளா களங்கட்டிக்குப்போறான். சில நேரம் ஆரோடையும் கூடிக் கொண்டு நண்டுக்குப் போறான்.”

“என்ன செய்யிறது எல்லாம் உன்ரகஷ்டகாலம். கருணைக்கு அந்தக் கதி வராமலிருந்தால் உனக்கு இந்த நிலைமை வந்திருக்குமா?” என்றான்.

‘கருணை’ என்ற பெயரின் உச்சரிப்பைக் கேட்டதுமே பொன்னம்மாளின் கண்கள் ‘குபுக்’ என்று நீரைக்கக்கின. அவள் மேற்கொண்டு எதுவும் பேசவில்லை. கருணையை நினைவுபடுத்தி ஏற்கனவே புண்பட்டிருக்கும் அவள் மனதை மேலும் தான் நோகச் செய்துவிட்டதை உணர்ந்து கொண்ட கிழவர் “இருபிள்ளை நான் வெத்திலை வாங்கிக் கொண்டு வறேன்” என்று அந்த இடத்தை விட்டு அகன்றார்.

பொன்னம்மாவுக்கோ கிழவர் சொன்னது ஒன்றும் காதில் விழவில்லை. அவள் இதயத்தில் இருந்து ‘கருணை கருணை’ என்ற ஒலியே எதிரொலித்துக் கொண்டிருந்தது. கருணை அவன்தான் அவளது முதற் கணவன். ஆறே மாதம் அவளோடு வாழ்ந்து அவள் வாழ்வில் அழியாத நினைவுகளை ஏற்படுத்திச் சென்றுவிட்ட அவள் துணைவன்.

ஆண்மைக்கு இலக்கணம்; அயராத உழைப்பாளி; உழைத்து உழைத்து உரமேறி

**நாவண்ணன்**

திரண்டு உருண்டு தினவெடுத்த அவன் தசைகளின் முறுக்கேறிய அந்தக்கோலம்! அவன் கோலம் அவள் கண்முன் காட்சி தருகின்றது. ஐயோ அவனது உடலைக் கூட கடைசியில் அவளால் பார்க்க முடியாமல் போய்விட்டதே!

தாய் தந்தையற்றவளாக உடன் பிறந்த அண்ணன் குடும்பத்தோடு பொன்னம்மா அண்டி வாழ்ந்து கொண்டிருந்த போதுதான் அவளுக்கும் கருணைக்கும் நட்பு ஏற்பட்டது.

கருணை இலங்கையிலே பிறந்தவனாயினும் அவனது தாய் தந்தையர் இந்தியாவில் முத்துப்பேட்டையில் இருந்து வந்தவர்களாம். இது நடந்தது இலங்கை சுதந்திர மடைவதற்கு முன்பு. என்றாலும், அவன் வாழ்ந்த பனங்கட்டிக் கொட்டு குறிச்சி வாசிகள் அவனையும் அவர்கள் மொழியில் ‘இந்தியாக்காரன்’ என்று தான் அழைப்பார்கள்.

அவனுடைய கஷ்டகாலம் அவனுக்கு வயது பதினைந்தைத் தாண்டுவதற்கு முன்னரே அவனது தாயும் தகப்பனும் ஒருவர் பின் ஒருவராகப் போய்ச் சேர்ந்து விட்டார்கள். இப்பொழுது அவன் அனாதை ஆனால் கடினமான உழைப்பாளி. எந்தச் சம்மாட்டியும் தங்களோடு அவனைச் சேர்த்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள்.

நாட்கள் சென்றன. நாசமாய்ப்போன பட்டாஸ் தொழில் வந்து சேர்ந்தது. ‘டைனமைற்’ போட்டு மீன் பிடிப்பதை அரசாங்கமும் எவ்விதமோ தடைசெய்யப் பார்த்தது. ஆனால் அத்தொழில் வளர்ந்ததே ஒழிய குறைந்தபாடில்லை. இலகுவான முறை; அதிகமான வருமானம். ஒருவர் பின் ஒருவராக பட்டாசுத் தொழில் சம்பாத்தியத்தில் இறங்கி விட்டனர்.

ஆழ் கடலில் மீன் கூட்டமாக நிற்கும் இடத்தை இனம் கண்டு ‘டைனமைற்’ வெடியைக் கொழுத்தி எறிய வேண்டும். எறியும் விதத்திலே கூட ஒரு பக்குவம் உண்டு. கையிலே இருக்கும் வெடியின் திரி எரிந்து கடலில் எறிந்தவுடன் விழுந்து வெடிக்கும் நிலைமைக்கு வந்தவுடனேயே எறிய வேண்டும்.

இந்தக் கலையிலே கைவந்தவனாக விளங்கினான் கருணை. அதிலே மட்டுமல்ல நீண்ட நேரம் நீருள் மூழ்கி வெடி அதிர்ச்சியால் கலங்கி மடிந்த மீன்களைசேகரிக்கும் கலையிலும் அவனுக்கு நிகர் அவன்தான். அவன்பாடு கொண்டாட்டம் தான் யாரும் விரும்பி அவனைத் தொழிலுக்கு அழைத்துச் செல்வர்.

இப்பொழுது அவனை சாதாரண நேரங்களில் பார்த்தால் யாரும் மீன்பிடித் தொழிலாளி என்றே கூறமாட்டார்கள். நலுங்காத ஆடையும், கைக்கு மோதிரமும், கடிகாரமும், கழுத்தில் சங்கிலி, ஆளே ஒரு சம்மாட்டி மாதிரியே காட்சிதந்தான்.

இந்த நிலைமையிலேதான் பொன்னம்மாளுக்கும் அவனுக்குமிடையிலே நட்பு ஏற்பட்டது. அவர்கள் திருமண

16ம் பக்கம் பார்க்க

## வித்தையின் விலை

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு முறை கங்கைக்கரையில் தியானம் முடிந்து கண் திறந்த போது, ஒருவர் நீர் மேல் நடந்து வருவதைக்கண்டார். இதைப் பார்த்து இராமகிருஷ்ணர் சிரிக்கலாயினர். அம்மனிதர் அருகே வந்து, “இந்தக் கடினமான வித்தையைப் பத்து ஆண்டுகள் முயன்று கற்றேன். ஏன் சிரிக்கிறீர்கள்” என்றான். “இல்லை நீர்கற்றவித்தை காலணாவுக்குத் தான் பயன்படும் என்றார்.

“அதென்ன அப்படிக் கூறுகிறீர்கள்?” என்றார்.

காலணா கொடுத்தால் தான் படகில் கரையைக்கடந்து விடலாமே என்று சட்டெனக் கூறினார் ராமகிருஷ்ணர்.

சீ. லம்போதரன்
புன்னையம்பதி.

# வணக்கம் ஐயா! போய் வாருங்கள்!!

கோப்பாய்.எஸ்.சிவம்

எந்தன்இலக் கியசேவை தன்னைப் போற்றி
எனக்கொருவி ழாவெடுக்க வேண்டு மென்றே
எந்தனது இரசிகர்கள் பலரும் சேர்ந்தே
இனிதாக முடிவெடுத்தீர்! நன்று! நன்று!!

என்பெயரில் சபைஒன்றும் அமைத்தீர்; எந்தன்
இனியவிழா நடத்துகிற பொறுப்பும் ஏற்றீர்!
என்கருத்தைக் கேட்டொரும டல் தொடுத்தீர்!
இந்தாரும்! என்கருத்தைச் சொல்வேன் கேளும்!

பலர்நாளும் போய்வரும்ஓர் பாதை யோரம்
பக்குவமாய் எந்தனது உருவம் தன்னை
சிலைஎழுப்ப வேண்டுமென்றீர்; வேண்டாம் என்பேன்
சிலைமீதில் தினம்காகம் எச்சம் போடும்!

பலர்காணப் படம்போட்டே ஊர்கள் தோறும்
பவ்வியமாய் ஒட்டுகிறோம் என்று சொன்னீர்
நிலம்மீதில் படம்தட்டிக் கால்களாலே
மிதிப்பார்கள் வேண்டாம்என் றுரைப்பேன் நானே!

பாட்டுகளைத் தொகுத்தொருநூல் வெளியிட்டெங்கும்
பலர்படிக்க விநியோகம் செய்வோமென்றீர்
'ஹோட்டலி'லே கைதுடைக்கும் துண்டாய் மாறும்
கொடுமைஅது; வேண்டாம்என் றுரைத்து நிற்பேன்!

முத்திரையில் எனதுபடம் போடுதற்கு
முயற்சிப்போம் என்றுரைத்து நின்றீர்; சொல்வேன்
சத்தியமாய் வேண்டாமே! எச்சில் பூசிச்
சடக்கென்று முகத்தினிலே குத்து வார்கள்!

இப்படியாய் எந்தனைநீர் கௌரவித்தே
இன்னுமெனக் கவமானம் செய்ய வேண்டாம்
எப்படியோ நான்எனது வாழ்க்கை தன்னை
இழுத்திடுவேன்; போய்வாரும்; வணக்கம் ஐயா!!

# கற்புச்சுடர்

(ஆனைரயம்பதி !ஆ. தங்கராசா)

நீலக்கடல் பொங்கிப் பெருகி ஆர்ப்பரித்து, ஆக்ரோஷமாக வீறுபாடி அலைக் கரங்களை இலங்கை மண்ணிலே அடித்து முழக்கி பம்மாத்துக் காட்டுகிறது. தூரத்தே இராவணன் கோட்டை. தங்க ஒளியால் மினுங்குகிறது. தங்கத் தமிழ்ஈழக் கடற்கரை மணலிலே கவலை தோய்ந்தமுகத்தோடு, வீரியத் தோள்கள் விம்மி எழும்ப குரங்குகளின் தலைவன் அனுமபுத்திரன் நின்று கொண்டிருக்கிறான். தலைவன் இராமன் இட்ட கட்டளை நெஞ்சிலே ஓவியமாகப் பதிந்து கிடக்க, இராமச்சந்திரனின் காதல் காணிக்கையாம் "கணையாழி" கையிலே சுடர்விட சிந்தனைச் சிற்பியாய் சொல்லின் வேந்தன் நின்றுகொண்டிருக்கிறான். இலங்கையை ஒருதரம் நோட்டம் விடுகிறது அந்த வீரமகனின் உதய சூரியனை ஒக்கும் ஒளி அம்புகளாம் அந்தக் கண்கள் ஆகா! ஆகா!! அழகு! பொங்கும் அழகு! பூரிக்கும் அழகு! எங்கும் அழகு! மயனின் கைவண்ணம் இலங்கையிலே அப்படியே முழுமை பெற்று மண்ணின் சொர்க்கமாகப் பொலிய நிற்கிறது. கண் இமை வெட்டும் நேரம் மரகதத் தீவின் அழகிலே தன் உணர்வை இழந்த அனுமன், விழிப்புற்று; வந்த புனித காரியத்துக்காக இலங்கையை வட்டமிட ஆரம்பிக்கிறான். எங்கும் மலை! மலை எங்கும் பசுமை!! பசுமையை மிஞ்சிய மலர்க்காடு சுற்றிவரக் கடல் வேலி நடுவினிலே மணிமுத்து. அனுமன் திகைத்தே விட்டான். அதே வேளையில் குரங்கு மதியான் சோர்ந்தும் விட்டான். எதற்காக வந்தானோ அது விடியாத இரவாக, பூட்டிய கபாடமாகக் கிடந்தது. தலைவன் இட்ட கட்டளை "ஊமைப் பெண்ணின்" வயிற்றில் வளரும் இரகசியக் கற்பமாய் குகை இருளின் கனவாய் புலராத காலையாய்க் கிடக்கிறது. மாருதியின் கனவோ வாயிலிருந்து நெருப்புத் துண்டமாய் நீண்ட பெருமூச்சுப் புறப்படுகிறது. உணர்ச்சி பாயும் பரியாகத்தாவ, வற்றாத வீரம் சீறும் புலியாக உறுமுகிறது. வந்த காரியந்தான் நிறைவேறவில்லை. ஆமாம்! பட்ட மகரிஷி! கற்புக்கனலி சீதாபிராட்டியைக் காண முடியவில்லை. அணையாச் சுடர் எங்கே? அழகின் பிம்பம் மறைந்த மாயம் என்ன? பொன்வதனி எங்கே சிறைப்பட்டாள்? மிதிலை அழகி மண்ணின் எருவானாளா? கொடிய காமப்புலியின் விருந்தானாளா? ஜனகன் மகள்; ஏரோடு, கொலைக்கருவி அம்புவில்லோடு ஒன்றிக் கலந்து சங்கமமாகிப் பிறந்த வெற்றிச் செல்வி, விறல்மகள், தூய நங்காள் எங்கே ஒளிந்தனள்? இல்லையேல் ஒழிக்கப்பட்டனள்? பத்துத்தலை இராவணன் காமப்பித்துத் தனத்தாலே சீதையை எங்குதான் சிறை வைத்தானோ? அனுமன் ஆறுதல் காண ஒரு மலையிலே குந்திக் கொள்ளுகிறான். கொடிய அரக்கர்களின் கண்களிலே பட்டுவிட்டால்................ ஆபத்தை விலைக்கு வாங்கியது போன்றதுதான்; நெருப்பை மடியில் கட்டிய வாயுபுத்திரன் வலிமை வேந்தன் மீண்டும் பறக்கிறான். தங்கமாளிகை இராவணனின் அரண்மனை கம்பீரமாக நின்றுகொண்டிருக்கிறது. அரண்மனைக்கு அப்பால் அது என்ன வனம்! பூக்கள் சிரிக்கிறதே! தும்பிகள் இசைக்கிறதே! புது மணம் மனத்துக்கு இங்கிதம் ஊட்டுகிறதே! தேன்மழை பொழிகிறதே! அஃது என்ன, மடந்தையர் காவல் புரிகின்றனரே! வாளும், வேலும் தாங்கிய மங்கைப் புலிகள். அப்படி என்றால் இந்த மண் "பெண்ணரசி" நாடா? காற்றிலே கலந்து வரும் கீதம்............. பூங்காவில் இருந்து புறப்படும் குயில் நாதமா? கலை மகளின் கைப்பொருளாம் இன்னிசை வீணைக்கீதமா? என்ன! அடா என்ன அது!! நெஞ்சை அள்ளும் செந்தமிழ் அல்லவா காற்றில் அசைந்து காதை நிறைக்கிறது. அப்படி என்றால் தமிம்ஈழ மண்ணில் கால் வைத்து விட்டேனோ? ஆகா! தமிழ் ஈழமண்ணே!" எனக் கூத்தாடி பூத்தமலராய் பூரிப்புக் கண்ட அனுமனின் மூளையை ஐயம் குடைய...... வாள் ஒளி போன்ற கண்களை அந்த வனத்திலே பாய்ச்சுகிறான். அங்கே....ஆகா! ஆகா!! தன்னை மறந்து மாருதி கூத்தாடுகிறான். பூக்கள் பூத்துக் குலுங்கும் மர அடியின் கீழே கற்புச்சுடர் சீதாபிராட்டியார் சோகமே உருவாய் வீற்றிருக்கிறார். அனுமன், கோதண்ட இராமனின் இணைபிரியாத் தோழன் கணையாழியைத் தொட்டுப் பார்த்தவாறு அந்தப் பூஞ்சோலையை நோக்கி முன்னேறுகிறான்.

— o —

### போர் தந்திரம்

எதிரி முன்னேறும் பொழுது நாங்கள் பின்வாங்குவோம். எதிரி தப்பும் பொழுது நாங் தொல்லைப் படுத்துவோம். எதிரி பின்வாங்கும் பொழுது நாங்கள் பின் தொடருவோம். எதிரி களைத்தவுடன் நாங்கள் தாக்குவோம்.

(மாசேதுங்)

13ம் பக்கத் தொடர்ச்சி.

மும் எதுவித தடையும் இன்றி நடைபெற்று முடிந்தது.

எங்கும் இருக்கின்ற 'நாக்கு வளைக்கும்' கூட்டம் அங்கேயும் இல்லாமல் போய் விடுமா? "பொன்னம்மாள் போயும் போயும் இந்த இந்தியாக் காரனிட்ட போயிருக்கிறுளே. தாய் தகப்பன் இல்லாமல் வளர்ந்து காவாலியாத் திரிந்தவன் எங்க வச்சிருக்கப்போறுன். கடைசியில் இவள் கண் கலங்கிக் கொண்டுதான் நிற்கப் போறுள்" இந்த நாக்குவளைப்புக்கள் அவர்கள் காதிலும் விழத்தான் செய்தன.

நாட்கள் நகர்ந்தன. அவனுடைய வாரிசு, அவர்களின் அன்புச்சின்னம் பொன்னம்மாளின் வயிற்றில் புது உருப் பெற்றுக்கொண்டிருந்தது. அப்பப்பா அந்த நாட்களில் அவர்கள் நடத்திய இல்லறம்தான் என்ன! ஒருவரில் ஒருவர் பொழிந்த அன்புதான் என்ன!

ஒருநாள்......

"இந்தாங்க"

"என்ன பொன்னம்மா"?

"நான் சொல்லுற மாதிரி நீங்க கேப்பீங்களா?"

"என்னண்டுதான் சொல்லன்"

"இந்தாங்க நீங்க இனி பட்டாசுக்கு போகவேண்டாம் இந்தாங்க"

"ஏன்?"

"ஆமிக்காரங்களிட கையில பிடிபட்டு மற்றவங்கள் வாங்கிற அடியைப் பாக்கிறபோது எனக்குப் பயமாய் இருக்குது இந்தாங்க எங்களுக்கு இருக்கிறது போதும். நானும் இந்த நிலையில இருகிற போது நீங்களும் பிடிபட்டு அடிபட்டு ஆஸ்பத்திரியில கிடந்தால் நான் என்ன செய்யிறது?"


"பொன்னம்மாவின் இந்தப் பயத்தையும், வார்த்தைகளையும் கேட்டு பெரிதாக நகைத்தான் கருணை. "பொன்னம்மா எந்த ஆமியும் பொலிசும் நேவியும் என்னை ஒண்டும் செய்ய ஏலாது. இதுவரையில நான் அவனுகளுக்கு எத்தினை தடைவை 'டிமிக்கி' கொடுத்திருக்கிறன் தெரியுமா?"

பொன்னம்மா பேசாமல் இருந்தாள். அவன் தொடர்ந்தான். அவன் குரலில் இப்பொழுது சற்று மாற்றம் தொனித்தது. "பொன்னம்மா உனக்கு விருப்பமில்லாத தொழிலை நான் தொடர்ந்து செய்யமாட்டன் நான் கெதியில விட்டுடுவன். எப்பதெரியுமா. என் மகன் பிறந்த அண்டைக்கே. அதுவரையில நான் உழைக்கப்போறன். இந்த இந்தியாக்காரனுக்கு வாழ்க்கைப் படுறுளே; அவன் என்ன இவளை நல்லாவா வச்சிருக்கப்போறுன் எண்டு நாக்கு வளைக்கிறுகளே அவளுகளுடைய வாய்களை மூடவைக்கிறதுக்காக என் மகன் பிறக்கிறதுக்கிடையில நான் உழைச்சுவலையும் வள்ளமும் வாங்கி நானும் ஒரு சம்மாட்டி ஆகிக்காட்டுறன் பார். அது மட்டும் என்னை தடை செய்யாதே பொன்னம்மா?

அவனுடைய அந்த ஆசைக்கும், சபதத்துக்கும் அவளால் மறுப்புக் கூறமுடியவில்லை. பேசாது நின்றுள்.

ஒருவாரம் கழிந்தது.

அன்று... அதுதான் அவள் வாழ்வில் இடிவிழுந்த நாள்...



வழமைபோல் பட்டாசுத் தொழிலுக்குச் சென்றிருந்தான் கருணை. பட்டாசைக் கொழுத்தி எறிபவன் அவன் தான். நடுக்கடலில் 'பாரை' மீன் இளைதிரளுவதைப் பார்த்து, கையில் இருந்த மூன்று அணைப்பு 'டைனமற்'றின் திரியில் நெருப்பை வைத்தான். அந் நெருப்பை திரியில் வைத்தானு? அல்லது அவன் வாழ்வில் வைத்தானு?

திரி எரிந்து அதன் நீளம் குறுகிக்கொண்டே வந்தது, குறுகிவிட்டது இனி எறிந்து விடவேண்டியதுதான். திரியின் நீளத்தையே பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களுக்கு ஏதோ நடக்கப் போகின்றது என்ற அச்சம் உண்டாகிவிட்டது.

“கருணை எறியடா” என்று கூறிக்கொண்டே கடலுள் பாய்ந்தனர். கருணை அதை வீசுவதற்கு கையை உயர்த்தினான் அதற்குள்… …

டுமீல்……

அந்தப்பயங்கர ஓசை அப்பிராந்தியத்தையே கலக்கியது. அவர்கள் ஏறிச்சென்ற வள்ளம் தண்ணீருள் மூழ்கி விடுவதைப் போல் அசைந்து குலுங்கியது. வள்ளத்தின் மேற்பலகைகள் ஒன்றிரண்டு பெயர்ந்து விட்டிருந்தன.

கடலிலே பாய்ந்து மூழ்கிய சக தொழிலாளிகள் நீர்மட்டத்துக்கு மேலே வந்து பார்த்த பொழுது……

வள்ளத்திலே ஈரம் உலராத இறைச்சித் துண்டுகளும் எலும்புத் துண்டுகளும் ஒட்டிக் கொண்டிருந்தன. வள்ளத்தைச் சுற்றிய நீர்ப்பரப்பு செம்மை கலந்து காணப்பட்டது. கடலிலும் தசைத் துண்டுகள் மிதந்து கொண்டிருந்தன.

கருணையோடு கடல் மீது சென்ற மற்றவர்கள் அவனை இழந்தவர்களாக, கடல் அன்னைக்கு பலிகொடுத்து விட்டு வந்து சேர்ந்தார்கள்.

செய்தி கேட்டு ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. அவர்களிடம் முழுச்சேதியையும் கேட்பதற்கு பொன்னம்மாள் சுய அறிவோடு இருக்கவில்லை.

அவள் இல்லறம் முற்றுப் பெற்றுவிட்டது. வாழ்வு அஸ்தமித்துவிட்டது. ஆறுமாத தாம்பத்திய இன்பத்தில் இடி விழுந்தது. கவலையில்லாமல் அவளை வாழவைக்கச் சென்ற அவன் அவளைக் கவலைக் கடலினுள்ளேயே தள்ளிவிட்டுச் சென்றுவிட்டான். அதன் பின்னர் அவள் வாழ்வு இயந்திரம் போல் உழன்றது. அண்ணன் குடும்பத்தோடு மீண்டும் ஒட்டிக் கொண்டாள். ஆனால் எத்தனை நாளுக்கு! கருணையின் சம்பாத்தியம் கரைந்தது. அண்ணன் குடும்பத்தின் கருணையும் படிப்படியாகக் கரைந்தது.

மீண்டும் ஐந்து வருடங்கள் தானே க்ஷ்டப்பட்டு, கொள்ளி பொறுக்கி விற்று, அப்பம் சுட்டு அவள் வாழ்வு நடந்து கொண்டிருந்தது. அவள் மறுமணம் செய்து கொள்ளவேண்டும் என்று பலரும் கூறினர். அந்த வார்த்தைகளே அவளைக்



கொல்லுவதுபோல் இருந்தன… முதலில் கேட்டவர்கள் மீது சீறினாள் சினந்தாள் ஆனால்……

அவளும் ஒரு பெண்தானே. ஆதரவு அற்றவள்… தனித்த உழைப்பும், துன்பமும்… இரண்டு வாரம் ‘மலேரியா’ காய்ச்சல் என்ற பெயரில் படுக்கையில் போட்ட பொழுதுதான்; அவ்வேளை துணையும் ஆறுதலும் அற்றுத் தவித்தபொழுதுதான் தனக்கு என்று ஒரு துணை வேண்டும், என்ற எண்ணம் அவளுக்கு முதன் முதலில் ஏற்பட்டது. அதுவும் அவளுக்காக அல்ல, தனக்குஏதும்நேர்ந்துவிட்டால் தனது அன்புச் செல்வம், கருணையின் வாரிசு அனாதையாக்கப்பட்டுவிடுவானே. தனக்குப்பின் அவனது கதி என்ன என்று எண்ணித்தான் அவள் அந்த முடிவுக்கு வந்தாள். அவள் மீது அனுதாபம் கொண்ட ஒரு சிலரும் அதையே வலியுறுத்திக் கூறினர் முடிவு…

அழகுப்பிள்ளைக்கு அவள் மீண்டும் வாழ்க்கைப்பட்டாள். அழகுப்பிள்ளையும் கட்டின மனைவியை காலனிடம் பறிகொடுத்துவிட்டு தனிக்கட்டையாக வாழ்ந்தவன். மனைவியைப் பறிகொடுத்த கவலையால் குடிகாரனாக மாறிய அவனை நாளடைவில் தன் வழிக்குத்திருத்தி விடலாம் என்று எண்ணித்தான் அவள் அவனுக்கு வாழ்க்கைப்படச் சம்மதித்தாள்.

பாவம் அவள் ஏமாந்து விட்டாள். தன் சுமையில் பங்கு கொள்ளத் துணை தேடிச் சென்ற அவள் அவன் சுமையும் தாங்கும் சுமைதாங்கியாகி விட்டாள். அழகுப்பிள்ளையின் மூலம் மூன்று பிள்ளைகள் நான்காவது வயிற்றிலே… … வேறு என்ன சுகத்தைக் கண்டுவிட்டாள்.

செல்லையாக் கிழவரின் பேச்சால் சிந்தனை வழியே எங்கோ போய் விட்ட அவளை செபஸ்தியார் ஆலயத்தில் பகல் பன்னிரெண்டு மணிக்கு ஒலிக்கும் மணி ஓசை விழிப்புற வைக்கிறது. திடுக்கிட்டு நிமிர்ந்த அவள்—“ஐயோ பிள்ளைகள் பசியில் கத்தப் போகுதுகளே” என்று கூறிய வண்ணம் சேலையில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிக் கொண்டே தனது வீட்டை நோக்கி நடக்கின்றாள்

இரக்கத்துக்குரியவள் பொன்னம்மா… அவள் சுமக்கின்றாள்… இன்று அவள் அனுபவிக்கும் இந்த இடர் நிறைந்த வாழ்வை வறுமையை, குழந்தைகளை, அவர்களுக்காகவும் அழகுப்பிள்ளைக்காகவும் உப்புக் கூடைகளையும் ஆறே மாதம் கருணையோடு வாழ்ந்துவிட்ட இன்ப நினைவுகள் ஊட்டும் சக்தியால் சுமக்கின்றாள்…

(முற்றும்)

# மு. க.

## க. கலாமோகன்

தமிழ் இலக்கிய உலகிற்குச் சேவை செய்தவர்களுள் மூன்று மு. க. குறிப்பிடத்தக்கவர்கள். அவர்கள் மூவர் பற்றிய சிறு குறிப்புக்கள் வருமாறு.

பண்டிதமணி
மு. கதிரேசன் செட்டியார்

தனது வாழ்வை தமிழ் இலக்கியப் பணிக்காகவே அர்ப்பணித்த பெருந்தகை பண்டிதமணி.

பள்ளிக்கூடப் படிப்பு இடையில் தடைப்பட்ட போதும், தனது ஊனமுற்ற காலுடன், தன்னம்பிக்கை ஒன்றையே துணையாகக் கொண்டு இலக்கியப் பணியில் தன்னை இணைத்துக் கொண்ட சீரிய பண்பாளர்.

இவரைப் பற்றிப் பிரபல வரலாற்று நூலாசிரியர் சோ. ம. லெ. அவர்கள்.

"இவர் பட்டம் பெறப் பிறந்தவரல்லர், பட்டம் கொடுக்கப் பிறந்தவர்" என்று குறிப்பிட்டுள்ளார்.

வாதத்திறமையிலும் பண்டிதமணியின் திறன் உயரியது. ஒருமுறை பண்டிதமணி அமர்ந்திருந்த ஒரு இலக்கிய மேடையிலே டி. கே. சியும் அமர்ந்திருந்தார்.

முதலில் பேசிய டி. கே. சி.

"இலக்கணமாகிய ஆலையில் மாணவர்களாகிய கரும்பைப் புகுத்திப் பிழிந்தெடுக்கின்றார்கள்" என்று இலக்கண முறையைத் தாக்கிப் பேசினர்.

இவருக்கு அடுத்ததாகப் பேசஎழுந்த பண்டிதமணி

"அப்படிச் செய்வதனால் தான் சுவை மிகுந்த கருப்ப நீர் கிடைக்கின்றது" என்று கூறி டி. கே. சியின் நாவை அடக்கிவிட்டார்.

பண்டித்தமணியின் உரைகள் இலக்கிய உலகில் உன்னத இடத்தைப் பெற்றுள்ளன.

பண்டிதமணியால் திருவாசகத்துக்கு எழுதப் பெற்ற பேருரை பலராலும் நன்கு போற்றப்படுகின்றது.

கலைஞர்
மு. கருணநிதி

கலைஞர் என்று கூறியமாத்திரத்தே, தமிழர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளக் கூடிய வரையில், தனது நாவாலும், எழுத்தாலும் தமிழ்ப்பணி செய்து புகழ் பெற்றவர் கலைஞர் மு. க.

எதையும் விடா முயற்சியின் துணை கொண்டு வென்று வரும் கலைஞர், கடல் கடந்து வாழும் தமிழ் மக்களின் ஏகோபித்த அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமானவர். நாவன்மை மிக்கவர் மட்டுமல்ல, திட்டங்களைத் தீட்டுவதிலும் அவற்றை செயற்படுத்துவதிலும் அவருக்கு நிகர் அவரே. "கலைஞரின் வாழ்வு" "தமிழரின் வாழ்வு" என்று கூறும் அளவுக்கு உயர்ந்துள்ளது.

தென்புலோலியூர்
மு. கணபதிப்பிள்ளை

தமிழ் நிலத்தில் தற்போதுள்ள ஆராய்ச்சியாளர்களுக்குள்ளே தலைசிறந்த இடத்தை வகிப்பவர் தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளையவர்கள்.

தனித் தமிழுக்காகப் பாடுபட்டுவரும் இவரது "தமிழன் எங்கே?" என்னும் நூல் பல்லோராலும் பாராட்டப்பெற்றது. இவரது ஆய்வுகளில் தமிழின் பழமை, தமிழ் மக்களின் பெருமை, தமிழ் இலக்கியத்தின் தனிப் பெரும் சிறப்பு இவைகளைக் காணக் கூடியதாகவிருக்கின்றது.

இவரது ஆய்வுகளைப் படிக்கும் போது தமிழ் நரம்புகள் புத்துணர்வைப் பெறும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பல தமிழ் அறிஞர்களைத் தோற்றுவித்த தென்புலோலியூரே இவரது பிறப்பிடமாகும்.

# சோறா? சுதந்திரமா?

சென்னை நகர ஜனநெருக்கடியுள்ள ஒரு பகுதியில் ஒரு சிறு அறை. பத்துப் பதினைந்துபேர் உட்கார்ந்திருந்தார்கள். 1975 ஜூன் மாதக் கடைசியில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்ட பின்னர் ஒரு சிறு வீட்டில் சிறு கூட்டம் நடக்கிறது. அந்தக் கூட்டத்தை நடத்துகிறவர் ஒரு கேள்வி கேட்கிறார். "மனிதனுக்கு சுதந்திரம் எதற்காகத் தேவை? உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு முதலியவை கிடைத்தால் போதாதா?" அந்த கூட்டத்திலிருந்த அத்தனை பேரும் இளைஞர்கள். ஒரு வாலிபன், அவனது உதடு துடிக்கிறது. கைவிரல்களை கோர்க்கிறான். பிரிக்கிறான் நாக்கினால் உதட்டை ஒரு தடவை தடவிக்கொடுக்கிறான் பிறகு சொல்கிறான்.

"எங்கள் வீட்டில் எலி உபத்திரவம் அதிகம். ஆகவே, அதற்காக எலிப்பொறியில் வடையை மாட்டி அதற்குள்ளே வைத்திருந்தேன். நள்ளிரவு எலிப் பொறியின் கதவு படீரென அடிக்கும் சத்தம். விளக்கைப் போட்டேன். ரோனியான ஒரு எலி அதில் மாட்டிக்கொண்டிருந்தது. விளக்கைப் பார்த்ததும் ஒருகணம் அது தாமதித்தது. அது என்ன செய்கிறது என்று கவனித்துக்கொண்டேயிருந்தேன். இங்கும் அங்கும் ஓடித்தப்பமுயன்றது. அந்தக் கதவின் அருகே போய் கம்பிகளின் பக்கம் போய் தனது மூக்கால் அதனைத் தள்ளிக்கொண்டு வெளியே வரப்பார்த்தது.

"சிறிது நேரத்துக்குள்ளேயே அதன் மூக்கெல்லாம் இரத்தமாகி விட்டது. பொறியிலிருந்து தப்ப வழியில்லையென்று தெரிந்தாலும் அது முயற்சியை விடாமல், மீண்டும் மீண்டும் வாயால் கடித்தும் மூக்கால் தள்ளியும் முயன்று கொண்டேயிருந்தது. "நாம்தான் கூண்டுக்குள் மாட்டிக்கொண்டோமே, வடைதான் நமக்கு மிகவும் பிடித்த பொருளாயிற்றே. வடையை சௌகரியமாய் சாப்பிட்டுவிட்டு வயிறாவது நிறையட்டுமே" என்று அந்த எலி நினைக்கவில்லை. சுதந்திரம் பறிபோனதும் அதற்கு உணவில் இருந்த ருசியும் போய்விட்டது. ஆகவே சோறா, சுதந்திரமா என்று எவராவது கேட்டால் எனக்கு அந்த எலியின் நினைவு வருகிறது என்று பதிலளித்தான்.

சாதுவைப்போல உட்கார்ந்திருந்த மற்றொரு வாலிபன் சுதந்திரத்துக்கும் தன் மானத்துக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தன்மானமுள்ளவர்களுக்குத்தான் சுதந்திரத்தின் அருமை புரியும். மற்றவர்களெல்லாம் "எண் சாண் உடம்பிற்கு வயிறே பிரதானம்" என்ற சித்தாந்தபடி சோற்றால் அடித்த பிண்டங்கள் என்றான் காரசாரமாக.

"சுதந்திரமிருந்தால் உணவு, உடை, வீடு அனைத்தையும் சம்பாதித்துக்கொள்ள முடியும்" என்றான் மூன்றாமவன்.

"சோறுதான் முக்கியம் என்றால் வெள்ளையனை வெளியே போகச்சொல்லியிருக்க வேண்டாம் அல்லவா?" என்றான் மற்றொருவன்.

நிமிடங்கள் கழியக்கழிய அந்த அறையில் சூடு அதிகரித்தது. சுதந்திரத்துக்காக நாம் எந்த விலை கொடுத்தாலும் அது பெரிதல்ல என்ற ஏகோபித்த முடிவுக்கு அனைவரும் வந்தனர்.

நன்றி: தினமணி கதிர்,
அனுப்பியவர்: தி. ரெத்னதேவி, கல்லாறு.

# புத்தக விமர்சனம்

## மாரீசம்

இலக்கியப் புலத்தில் நல்ல 'அறுவடை'யை பெற்ற அமுதனுக்கு இலக்கிய வாழ்வின் "வைகறை"யும் வஞ்சித்துவிட வில்லை. அந்த தெளிந்த விடிவிலே மாரீசங்களை இனங் கண்டு மக்கள் முன்கொண்டு வர முயன்று ஓரளவு வெற்றியும் கண்டு விட்டார்.

'மாரீசம்' 'அனுட்டானம்' சுயதரிசனம்' 'கருநாகம்' 'ஆத்மதிருப்தி' ஐந்து கதைகளை உள்ளக்கிய அழகிய நூல். 'அழகிய' எனும் பொழுது அட்டைப்படத்துக்கு ஒரு அப்ளாஸ் போடத்தான் வேண்டும் மிக நேர்த்தியாகச் செய்துள்ளார் திரு. ஈஸ்வரன் செல்வராஜா.

நூலின் ஐந்து கதைகளும் ஐந்து வெவ் வேறு அடிப்படைக் கருத்துக்களைக் கொண் டிருந்தபொழுதிலும் ஐந்திலும் மாரீசத்தின் சாயலே காணப்படுகின்றது.

'மாரீசம்: இடி முழக்கம் சேரசிங்கோவின் காலத்துக்கு ஒப்ப உருமாறி காரியம் சாதிப் பதில் மாரீசம்—

'அனுட்டாணம்: துறவியாய் உருமாறி வந்த துட்டர்கள் விளைத்த அநீதியின் மாரீசம்—

'சுயதரிசனம்: கந்தசாமியும், சிவபாதமும் யார் யார் முன்பு நல்லவர்களாக நடிக்க வேண்டுமோ, யார் யாருக்கு சிற்றேவல் புரிந் தும் வேண்டியதைப் பெற்று காரியத்தை தமக்குச்சாதகமாக்கிக் கொள்வதிலும் அவர் தம் மாரீசப்போர்வையுள் மறைத்துவைக்கப் பட்டிருக்கும் சுயதரிசனங்களில் மாரீசம்.

கருநாகம்: ஒரு நாடு, ஒரு மக்கள் எனப் பேசிய இனத்தவர்கள் ஒரு காலத்தில் கரு நாகங்கள் என்பதை காட்டுவதில் மாரீசம்.

'ஆத்மதிருப்தி: நன்றாக உள்ளவரை அண்டிப் பிழைத்து, அன்புகாட்டி அபகரித்து பின்னர் அவன் படுக்கையில் வீழ்ந்த பின்னர் தம் சுயபுத்தியைக் காட்டிப் புறக்கணித்துச் சென்ற உறவினர்கள் செயலில் மாரீசம். ஆக மொத்தம் மாரீசமாகவே இந்நூல் காட்சி யளிக்கின்றது.

கதைகள் அனைத்திலும் ஏதோ படிப்பினை யைச் சமூகத்தின்முன் படைக்கவேண்டும் என்று ஆசிரியர் எடுத்துள்ள பெருமுயற்சி பாராட்டற்குரியது. ஆனால் சொல்ல வந்த கருத்துக்கு அளிக்கவேண்டிய முக்கியத்துவம் சுற்றாடல் வர்ணனைகளால்—நீண்டு வரும் வாக்கிய அமைப்புகளில் மயங்கித்தெரிகின்ற தன்மையையும் அவதானிக்க முடிகின்றது.

விஞ்ஞான வளர்ச்சி மேம்பட்டகாலத் திலும் கடவுள் ஒருவனே மனைவியின் கருப் பையை காய்க்கவைப்போன் என்று கண்மூடி நம்பிக்கைவைக்கும் கோவிலடி நடராசாக் களின் சிந்தனைக்கு நல்ல மருந்துதான் "அனுட் டானம்"

நாடு மாறினால் நாமும் மாறுவோம் என்று வழுக்கல் வியாக்கியானம் கூறுபவர்களை 'சுய தரிசனத்தில் அழகாக படம் பிடித்துக் காட்டி யிருக்கும் அமுதன் நாடு மாறினால் நாம் மாறுவதல்ல 'நாம் மாறினால்தான் நாடு மாறும்' என்ற கருத்தை வலியுறுத்த வேண் டிய இடத்தில் வலியுறுத்தத் தவறினாலும் வாசகர்கள் அவரது சுயதரிசனத்தின் அடிப்

## முளையிலே கண்டவர்

1948ல் சுதந்திரன் நாளிதழாக வெளிவந்தபோது, பல்கலைக்கழக மாண வர் ஒருவர் ஒரு கட்டுரையை சுதந்திரனுக்கு எழுதியிருந்தார். அந்தக் கட்டு ரையை வாசித்த தந்தை செல்வா அவர்கள் சுதந்திரன் ஆசிரியர் மூலம் அந்த மாணவனை அழைப்பித்து அவருடைய கருத்துகளைப் பாராட்டினார். அன்று முதல் அந்த இளைஞருக்கும், தந்தை அவர்களுக்குமிடையே அடிக்கடி தொடர்பு ஏற்பட்டது. தந்தையின் கொள்கைகளில் பக்தியும், பற்றும் ஏற்பட்டது. தந்தையின் இயக்கத்தோடு தன்னை இணைத்துக் கொண்டார் அந்த இளைஞர். ஆனால் தந்தையின் காலத்தின் பின்னர் அவர் இயக்கத்துக்கு தான் தான் வாரிசா கவும், தலைவனாகவும் வரப்போகின்றவன் என்பதை அன்று நினைத்திருந்தாரா இளைஞராக இருந்த தளபதி திரு அமிர்தலிங்கம் அவர்கள். வளரும் பயிரை முளையிலே கண்ட பெருமை பெரியவருக்கே உரியது.

# தெரியாது

வடபகுதியில் பேருந்துகளில் பெண்களுக்கு மாத்திரம் என்று இருக்கைகள் ஒதுக்கப்பட்டு; அச்சட்டம் நடைமுறைப் படுத்தபட்டிருகிற தல்லவா? இதை எண்ணும் போது கொழும்பு வந்திருந்த ஹரிதாஸ் சுவாமிகள் கூறிய கதை ஒன்று நினைவுக்கு வருகிறது..

பல நாடுகளையும் சுற்றிப்பார்க்கப் புறப்பட்ட ஒருவன். அவனுக்குள்ள மொழிப்பிரச்சனையைத் தீர்த்துக்கொள்வதற்காக அந்தந்த நாடுகளில் பேசப்படும் மொழிகளில் 'தெரியாது' எனும் சொல்லை மட்டும் கேட்டு அறிந்து கொள்வான்.

ஒரு நாட்டில் பேருந்து வண்டியில் பிரயாணம் செய்த அவன், விடயம் தெரியாது வண்டியில் பெண்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து கொண்டான். இதைக்கண்டு ஆத்திரம் கொண்ட நடத்துனர் அவனிடம் "நீ என்ன ஆண்பிள்ளையா? பெண்பிள்ளையா? என்று அந்த நாட்டு மொழியில் கேட்டார்.

நடத்துனர் கேட்டது இன்னதென்று புரிந்து கொள்ளாத அவன் வாயில் இருந்து உடனே மறுமொழி கிடைத்தது "தெரியாது."

---

படைக் கருத்து என்ன என்பதைப் புரிந்து கொள்ளக்கூடியவகையில் உள்ளது.

உள்ள ஐந்து கதைகளிலும் 'கருநாகமும் 'ஆத்மதிருப்தியும்' வாசகர்களுக்கு தரமான நூலைப் படித்தோம் என்ற ஆத்ம திருப்தியை தரும்வகையில் அமைந்துள்ளன.

பாலையூட்டி வளர்த்தாலும் பாம்பு கடிக்கத்தான் செய்யும்' கதையிலும் சுருணை இல்லத்துக்கும் இதயத்துக்கும் உரியவரான கணேசனை அவர் வளர்த்த அந்தப் பாம்பே தன் விஷப்பல்லால் தீண்டியது. சிங்களவர்களில் நல்லவர்கள் வாழ்ந்தாலுல் கருநாகங்களே வென்று அழிப்பதால் கருணை இதயங்கள் எரிக்கப்படாமலும் இருக்க தமிழன் என்ன செய்யவேண்டும் என்பதை சொல்லாமல் சொல்லும் இக்கதையல்ல கடந்தகாலத்தின் நிகழ்வு எமது எதிர்கால வாரிசுகளுக்கு வரலாறு. ஆனல் டாக்டரின் பரமவைரி பொத்துஹறையில் அவர் முன்னே பல கொடுமைகளை மற்றவர்களுக்குச் செய்தவன்—ஓடாது ஒளிக்காது நின்ற டாக்டரை மட்டும் ஏன் விட்டுவைத்தான்?

சோரம் போன கோவலனை மீண்டும் சேர்த்துக்கொண்ட பத்தினித் தெய்வமான கண்ணகிக்கு எவ்விதத்திலும் சோடை போகாத நவீன காலப்பத்தினிகளின் பிரதிநிதியான குலமகன் கதை ஆத்மதிருப்தி அவன் உழைக்கையில் ஊதாரியாய் இருந்தபோது அவளுக்குக்கிடைக்காத 'ஆத்மதிருப்தி' அவன் முடமாகி அவளுக்குப் பாரமானபோது கிடைத்து விடுகிறதே—கணவன் திடமாக இருந்தபோது அண்ணன்மார் தயவை அண்டி வாழ்ந்தவள். அவன் முடமான பின்னர் தானே உழைத்து தலைவனுக்கு திருப்தியளித்து தனது 'ஆத்மதிருப்தி'யை பெற்றுக்கொள்ளுகிருளே—அவள் வள்ளுவர் கண்ட வாசுகி இன்றைய குடும்பத்தலைவிகளின் வழிகாட்டி.

ஈழத்தில் வெளியான சமகால இலக்கியங்களில் தரமானதோரு ஆக்கம். அமுதனின் இவ்விலக்கியம் மேலும் வளரவேண்டும்.

பக்கம் — 79

விலை:

பரிசுப் பதிப்பு —ரூபா 4—75

சாதாரண பதிப்பு—ரூபா 3 —50

# தமிழனால் தமிழன் அகதி ஆகிறான்

### வன்னிராஜ்

தகரப்படலையை வேகமாக அடித்து சாத்திவிட்டு உள்ளே நுழைந்தார் பொன்னம்பலத்தார். தகரப்படலை தனக்கே உரித்தான பாணியில் 'படார்' என்ற சத்தத்துடன் மோதுகிறது. படலைச் சத்தத்திலிருந்து சின்னம்மாவுக்கு பொன்னம்பலத்தாரின் நிலை புரிந்து விட்டது. "இந்தாள் இண்டைக்குக் கொதியிலை தான் வருது. என்ன நடந்துதோ?" மனதிற்குள் எண்ணிக் கொண்டாள்.

"டியேய்! சின்னம்மா......... உவன் இந்தியாக்காரனுக்கு வந்த நடப்பைப் பாரன் எளிய சாதியள்...... ஐந்து சதத்துக்கு வழியில்லாத நாயள்......... அதுக்கை கதைக்க வந்திட்டுதுகள்........." கோபத்திலிருந்த பொன்னம்பலத்தாரின் வாயில் இருந்து பலதரப்பட்ட வார்த்தைகள் வெளிவந்தன. கோபத்தில் அவர் மனைவி மக்களென்று பார்க்கமாட்டார். கையில் இருந்த அன்றைய தினசரியை கதிரையில் எறிந்துவிட்டு சாய்மனைக் கதிரையில் அமர்கிறார்.

"உன்னாலை தான்டி வந்த வினை இதெல்லாம்...... பாவம் கெஞ்சுதுகள் — இருக்க எங்கட காணியிலை இடம் கொடுங்கோவன் என்று அண்டைக்கு நீ கேட்டியே...... இண்டைக்கு என்ன சொல்லுதுகள் தெரியுமா?... இருபது வருஷத்துக்கு மேல இருந்துபோட்டினமாம்... காணி தங்களுக்குத் தானும் சொந்தமாம்...... அவர்... பொறுக்கிப் பயல்... ஏதோ கனக்கப் படிச்சிட்டாராம்...... காணிச்சட்டம் எல்லாம் தெரியுமாம்?...... எளிய நாயள்...... எதிர்த்துக்கதைக்க வந்திட்டுதுகள்..." கோபத்தால் பொரிந்து தள்ளிக் கொண்டிருந்தார் பொன்னம்பலத்தார்.

> **பெரியவரின் சிபார்சு**
>
> தங்களுடைய ஆக்கங்கள் எப்படியாவது சுதந்திரனில் வெளிவரவேண்டும் என்ற எண்ணத்துடன் சிலர், அவற்றை தந்தை செல்வாவின் சிபார்சுடன் சுதந்திரன் ஆசிரியரிடம் கொண்டு வருவதுண்டு.
>
> அப்படி சிபார்சுக்காக தன்னிடம் கொண்டு வரப்படும் ஆக்கங்களில் "இதை நீங்கள் படித்து தரமெனக் கண்டால், இதனால் நாட்டுக்கும் இனத்துக்கும் பிரயோசனமெனக் கண்டால் பிரசுரியுங்கள்" என்ற குறிப்பை ஆசிரியருக்கு எழுதி அனுப்புவார்கள்.
>
> 10-7-78ல் யாழ். சுதந்திரன் அச்சக திறப்பு விழாவில் சுதந்திரன் ஆசிரியர் கூறியது.

கணவனுக்காகப் பரிந்துபேசினாள் சின்னம்மா... "சும்மாவே சொன்னவங்கள் 'வயித்துக்குத்தை நம்பினாலும் வடக்கத்தையானை நம்பாதே' என்று...... பாவத்துக்கிரங்கி இருக்க இடம் கொடுக்க அதுகள் இப்ப சொந்தம் கொண்டாடுதுகளோ?... உதுகள் உப்பிடித்தானுங்கோ..." என்றாள். இல்லாவிடின் கணவனின் கோபம் அவளின் மேல் அல்லவா திரும்பிவிடும். பிழையோ சரியோ கணவன் பக்கம்தான் பேசவேண்டும்.

"டேய் முத்தையா" பொன்னம்பலத்தாரின் குரல் கடூரமாக ஒலித்தது.

"என்னய்யா?" என்று கேட்டுக் கொண்டு வந்தான் பொன்னம்பலத்தாரின் எடுபிடி முத்தையா...

"பெரியதம்பி பொலிசார் வீட்டிலை நிற்கிறாரே என்று பார்த்திட்டுவா...... இவைக்கு இண்டையோட ஒரு முடிவு பண்ணிட வேண்டும்...... இல்லாட்டி தலைக்கு மேல் ஏறிவிடுவாங்கள்...... எளிய வடுவாக்கள்......"

மலையகத்தில் தன் கணவனை இழந்து உண்ண வழியின்றி கையிலும் இடுப்பிலும் இரு குழந்தைகளுடன் வந்து சேர்ந்தவள் தான் மூக்காயி. அவளின் கோலத்தைப் பார்த்த சின்னம்மா மனமிரங்கி பொன்னம்பலத்தாரிடம்

## அளந்த சொல்லு

அதிகமாகப் பேசும் சுபாவமில்லாதவர் பெரியவர். எதையும் சுருக்கமாகவும், தெளிவாக புரிந்து கொள்ளக் கூடிய விதத்தில் நாசூக்காகவும் வார்த்தைகளைக் கையாளுவார்.

ஒரு தமிழரசுக் கட்சி உறுப்பினரைப் பற்றி நீண்ட நேரமாகப் புகார் செய்து கொண்டிருந்தார் அரசாங்க உத்தியோகத்தரான தொண்டர் ஒருவர். அவருடைய முறைப்பாடுகளின் முடிவில் "ஐயா நான் என்னுடைய வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு அவருடைய தொகுதியில் தேர்தலுக்கு நிற்கப் போகிறேன். நீங்கள் என்னைப் போடுங்கள்" என்றார். அவர் கூறியவை அனைத்தையும் அமைதியாகவும் பொறுமையாகவும் கேட்டுக் கொண்டிருந்த பெரியவர் ஒரே வார்த்தையில் அவருக்குப் பதில் கூறினார். அந்த வார்த்தை "நீங்கள் உத்தியோகத்தை ராஜினாமாச் செய்யிறது அவ்வளவு புத்திசாலித்தனமில்லை."

கேட்டுத்தான் அவர்களின் ஒரு காணியில் குடியமர்த்தினாள்.

'மாதமாதம்குத்தகைப்பணம் வேற வருது. காணிக்கும் காவலாக இருக்கு' என்று பொன்னம்பலத்தாரும் பேசாமல் இருந்துவிட்டார். ஆனால் இன்றைக்கு மூக்காயின் மூத்தமகன் கொஞ்சம் காரமாகக் கதைச்சு போட்டான். அது பொன்னம்பலத்தாரின் கோபத்தை கிளறி விட்டுட்டுது... "எளிய நாயள். ஏதோ பாவம் என்று இருக்க விட்டன். அதுகள் இப்ப சொந்தம் கொண்டாடுதுகள்....

பெரியதம்பி பொலிசார் சொன்ன விஷயத்தை நினைக்கும் போது பொன்னம்பலத்தாரின் மனம் 'திக்...திக்' என்றடிக்கும். "இஞ்ச பாருங்கோ பொன்னம்பலமண்ணை நாங்கள் நினைக்கிற மாதிரி உது சின்ன விஷயம் அல்ல...... நாங்கள் இந்த காக்கி உடுப்போட போய் வெருட்டிற விசயம் சரி வராது. ஏனென்றால் அவங்கட பக்கமும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. இருபது வருஷத்துக்கு மேல இருந்து போட்டாங்கள். சட்டம் வேற இருக்கு... பிறகு கோட்டு, கீட்டு என்று ஏறி, இறங்கி நாங்கள் தான் தலைகுனிய வேண்டிவரும். இந்த விஷயத்தை நாங்கள் மெதுவாகத்தான் அணுகவேண்டும். "இஞ்ச பார் மூக்காயி அன்றைக்கு உனது பரிதாப நிலையைப் பார்த்துத்தான் இந்த காணியிலை இருக்கவிட்டனான். இப்ப எனக்கு காணி தேவையாயிருக்கு. ஒருமாத அவகாசம் தாறன். அதுக்கை வேறெங்கையாவது போயிருங்கோ" என்று மூக்காயியிட்டை சொல்லுங்கோ. அவள் இதை கட்டாயம் செய்வாள். அவள் நன்றியுள்ளவள். ஆனால் அவன் மூத்த பொடியன் தான் ஒரு மாதிரி...... பொன்னம்பலமண்ணை நான் சொல்றேன் என்று குறைநினையாதையுங்கோ. உங்களுக்குத் தானே அங்கை, இங்கை என்று காணியிருக்கு— உந்தக் காணியை அவளுக்குக் கொடுத்துவிடுங்கோவன். உங்கட காணியை இப்ப எப்பிடி திருத்தி வைச்சிருக்கிறாள். பாவம் பிள்ளை குட்டிக்காரி.

பெரியதம்பி பொலிசாரின் யோசனை பொன்னம்பலத்தாருக்குஅவ்வளவுதிருப்தியாக இல்லை... நான் இருக்குமட்டும் என்ர காணியிலை ஒரு துண்டு கொடுக்கமாட்டன். நாயள் அவைக்கு காணியை குடுத்திட்டா பிறகு எங்களை மதிக்க மாட்டுதுகள்...... காணியை விட்டு எழும்புங்கோ என்று அவேற்ற கெஞ்சிகேட்கவோ?.. அது கனவிலையும் நடக்காது...

பொன்னம்பலத்தார் பொருமிக் கொண்டார். உதுகளை எப்படியாவது என்ர காணியை விட்டு எழுப்போணும். இல்லாட்டி காணியும் பறிபோய் விடும்... கண்டறியாத கவுன்மேந்தும்......, கண்டறியாத காணிச் சட்டமும். அவங்கள் தங்கட விருப்பம்போல நாளுக்கு நாள் சட்டத்தை மாத்துவாங்கள். எங்கட கஷ்டம் அவங்களுக்கு எங்க தெரியபோகுது. பொன்னம்பலத்தாரின் மூளை குறுக்கு வழியில் சிந்திக்கத் தொடங்கியது.

இந்த நேரத்தில் தான் இலங்கையின் பலபகுதிகளில் தோன்றியது ஒரு இனக்கலவரம்...... நாடே கலங்கியது. நாற்றிசையில் உள்ள தமிழர்கள் அல்லோல கல்லோலப்பட்டு அடி, உதை வாங்கி; பொருள் பண்டம் இழந்து, கணவன், மனைவி, பிள்ளைகளை இழந்து, கன்னியர் தம் கற்பை இழந்து..., வடதிசையை நோக்கி வந்தார்கள். இதற்கு வவுனியா நகரமும் விதிவிலக்கல்ல!... ஆங்காங்கே வீடெரிப்பு...... கொலை........ கொள்ளை...... இன்னும் எத்தனையோ. பொனனம்பலத்தார் தம் வீட்டை தம் அடியாட்கள் கொண்டு காவல் காத்தார். ஆனால் ஏழ்மை நிறைந்த குடும்பம் மூக்காயின் குடும்பம்...... அப்படி எத்தனையோ குடும்பம்...... இவைக்கெல்லாம் காவல் எங்கே?...... பாவம் நேற்றிரவு மூக்காயியின் வீடு தீ நாக்குகளின் பசிக்கு இரையாகிவிட்டது. அதிலும் புதினம் என்னவென்றால்...... அந்தப்பகுதியில் மூக்காயின் வீடு மட்டும்தான் தீக்கு இரையாகியது.

பொன்னம்பலத்தாரின் மனக்கண் முன் அடிக்கடி அந்த காட்சி தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தது...... மூக்காயி தலையில் கையை வைத்துக் கத்துகிறாள். மூத்த மகன் உடைமையை காப்பதில் முயல்கிறான். ஊர் மக்கள் ஓடி வருகிறார்கள். "வடுவாக்கள் என்னை என்னென்று நினைச்சுக் கொண்டாங்கள். சட்டம்பேசுகினமாம் சட்டம்..." சிரித்துக்

# மடல் வழித் தொடர்பு

தமிழீழச் செய்திகளைத் தமிழ் நாட்டவருக்குத் தொடர்ந்து தெரிவிக்கவும் எமது நியாயமான உரிமைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி விளங்க வைத்து ஆதரவு திரட்டவும் தமிழ் நாட்டவருடன் மடல் வழித் தொடர்பு கொள்ள விரும்பும் தமிழன்பர்கள் தங்கள் பெயர், முகவரி, வயது, பால் போன்ற விபரங்களுடன் பின் வரும் முகவரிக்கு எழுதுங்கள்:

க. இராஜமனோகரன்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

---

கொண்டார் பொன்னம்பலத்தார்.

"எங்னங்கோ உங்கட பாட்டிலை சிரிக்கிறியள்?" அரிசி புடைத்துக் கொண்டிருந்த சின்னம்மா கேட்டாள்.

"உவள் மூக்காயியை நினைச்சு சிரிக்கிறன் — அவையின்ரை திமிர்ப் பேச்செல்லாம் எங்கே போட்டுது......"

"பாவமுங்கோ மூக்காயி. உடுத்தின சீலையைத் தவிர ஒரு பொருளும் எடுக்கேல்லையாம்... ஏனுங்கோ அரைவாசி வீட்டையாவது அணைக்கேலாமல் போட்டுதோ"

"பின்னை என்னடி நாலு மூலையாலையும் நெருப்பு வைச்சுட்டாங்கள்... போதாக் குறைக்கு நல்ல காய்ந்த வைக்கலும் கிடந்தது. பிறகென்னண்டு சாமான் சட்டை எடுக்கிறது. உயிர் தப்பினதே அருந்தப்பு." சிரித்துக் கொண்டு கூறினார் பொன்னம்பலத்தார்.

"நெருப்பு வைச்சவங்கட கண்ணிலை மூக்காயின்ரை வீடு தான் பட்டுது. பாவம் அவள்; நெருப்பு வைச்சவங்கள் நாசமா போவாங்கள்" எப்படியோ பெண்மனம் அல்லவா இரக்கம் இருக்காதா?

"அவங்களை ஏனடி திட்டுறாய்? அவங்கள் நெருப்பு வைச்சது எங்களுக்கு தானே நல்லதடி.." சிரித்தபடி கூறியவர் சுருட்டை எடுத்து வாயில் வைக்கிறார். நஷனல் சேட்டுக்குள் நெருப்புப் பெட்டியை தேடிப்பார்த்திட்டு "டேய் முத்தையா இஞ்சை வா" என்றார்.

"என்னய்யா?" என்று கேட்டபடி காலை நொண்டி, நொண்டி வ்ந்தான் முத்தையா.

"ராத்திரி நான் தந்த நெருப் பெட்டியை தா. என்ரை எங்கையோ விழுந்துபோச்சு.."

"என்ரையும் தானய்யா. ராத்திரி உங்களோட ஓடின ஓட்டத்திலை எங்கையோ விழுத்திபோட்டன் அய்யா. கால்வேற உளுக்கி போட்டுது. நீங்கள் என்ன ஓட்டம் ஐயா ஓடினீங்கள்......" இடைமறித்தார் பொன்னம்பலத்தார் மனைவியைப் பார்த்தபடி. சின்னம்மா அரிசிக்குளிருக்கும் நெல்லை பொறுக்குவதில் மும்முரமாக இருந்தாள். "போதும் முத்தையா அடுப்படியிலை போய் நெருப்புக் கொள்ளியை எடுத்துவா." மேலும் நின்றால் உளறிகொட்டிவிடுவான் என்ற நோக்கத்தில் அவ்விடத்தில் நின்று அவனை அகற்றினார்.

"சொல்றனெண்டு கோபியாதையுங்கோ. மூக்காயிக்கு ஒரு ஐம்பது நூறை கொடுத்து விடுங்கோவன் அதைக் கொண்டு எங்கையாவது வீட்டை கட்டட்டுமன். பாவம் அவள்" என்றாள் சின்னம்மா தயங்கியபடி.

"ஏன் சின்னம்மா நாங்கள் கஷ்டப்படுவான்? அவைக்குத் தானே அகதி முகாம்கள் இருக்கு அதிலைபோய் சேரட்டுமன்." அலட்சியமாகக் கூறினார் பொன்னம்பலத்தார்.

# தலைவரல்ல அவர் தந்தை

**கண்ணன். தென்மட்டுவல்**

**1965**ம் ஆண்டு என்ற நினைவு.

காலிமுகக் கடற்கரை, மாலைவேளை, நண்பர் மூவருடன், காற்று வாங்கிக் கொண்டிருந்தேன்.

வானம் கறுத்திருந்ததால், கையோடு இரண்டு குடைகளையும் எடுத்துப்போயிருந்தோம்.

கடலலைகளைப் பார்த்தபடி பலதும் பத்தும் பேசிக் கொண்டிருந்தோம். நன்ருக இருட்டிய பின்னர் தான் நாங்கள் விடுதிக்குத் திரும்புவது வழக்கம். எங்கள் விடுதி கும்பனித்தெருவில் இருந்தது.

இருந்தாற்போல் எழுந்த குளிர்காற்று, மழை வருகிறதென எச்சரித்தது.

"மழைவரப் போகிறது" என்ருர் நண்பரொருவர். அடுத்த கணமே தூறல். அதைத் தொடர்ந்து மழை. எங்கிருந்தோ, பேரிரைச்சலுடன் மழை வந்து கொண்டிருப்பதுதெரிந்தது.

நாங்கள் எழுந்தோம். குடைகளை விரித்தோம். கொட்டும் மழையில் அரை குறை நனைந்தபடி, வீதியை நோக்கி நடக்கவாரம்பித்தோம்.

எதிரே, கொட்டும் மழையில், ஒருபெரியவர்.

அவர் ஓடவில்லை' என்றுமுள்ள மென்மைநடை...அவர் தூரத்தே கண்களைச் செலுத்தினுர்...

"அந்தா..... செல்வா...நனைகிருர் என்ருர் நண்பர் ஒருவர். மூவரும் ஒரு குடையை வைத்துக் கொள்ள, ஒரு குடையை வாங்கி, செல்வாவிற்குப் பிடித்தேன். நான்."

"எங்கே ஐயா கார்...? என்ன நம்பர்...?

அவர் நம்பரைச் சொன்ஞர்.

நண்பர்கள் திரும்பி வீதியோரம் நின்ற கார்களைப் பார்த்தனர். அங்கே கார் இல்லை. கார் அவரைத் தேடி, புற்றரையில் ஊர்ந்து கொண்டிருந்தது.

ஒரு நிமிடத்தில், எங்கள் அருகில் வந்து நின்றது, அந்தப் பழைய 'ஃபோட்' கார்.

பின் கதவைத் திறந்து விட்டார், ட்ரைவர்.

தந்தை உள்ளே ஏற உதவினேம்.

ஏறியவர் கதவைச் சாத்தவில்லை.

"நீங்களும் ஏறுங்கோ...... என்ருர்."

"ஐயா...நாங்கள் கிட்டத்தான் இருக்கிறேம். நடந்து போகிறேம், குடை இருக்கு," என்றேம்.

"இல்லை...நல்லாய் நனைஞ்சு போனீங்கள், ஏறுங்கோ என்ருர்."

மறுக்க முடியவில்லை.

அவர் அருகில் இருவரும் முன்னல் இருவருமாக ஏறி அமர்ந்தோம் கார் போய்க் கொண்டிருந்தது.

"எங்கே இருக்கிறீர்கள்?" அவர் கேட்டார்.

"கும்பனித்தெரு..."

காலி வீதியைக் கடந்து, மாக்கான் மாக்கார் வீதி வழியே பிறிட்ஸ் வீதிக்கு வந்த போது-

"ஐயா நாங்கள் இறங்குகிறேம்...அந்த முஸ்லிம் வாசிகசாலை மேல் மாடியில்தான் இருக்கிறேம்...இந்தக் கடையில் சாப்பிட்டுவிட்டுப் போவோம்." ஐயா, என்றேம்.

"சரி"...என்ருர்.

கதவைத் திறந்து வெளியே இறங்கி, குடைகளை விரித்துக்கொண்டு கடைக்குட் போய், நின்றேம், கையசைத்தோம்.

அந்த அகன்ற வீதியில் அந்தக் கார் மிக மெதுவாக திரும்பி ஓடிக்கொண்டிருந்தது, கொள்ளுப்பிட்டியை நோக்கி,

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பதில்:- யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இணுவில் என்னும் கிராமத்தில் பரம்பரையாக தமிழ்ப் பணி புரிந்து வந்த குடும்பத்தில் 'தணிகைப் புராண' உரையாசிரியர் மகாவித்துவான் பொ. அம்பிகைபாகரின் புதல்வரும் இயற்றமிழ் ஆசிரியருமான திரு. வைத்தியலிங்க பிள்ளையின் புத்திரனாக 31-8-1923ல் பிறந்தேன். எனது தாயார் பெயர் செல்லம்மா. அவர்கள் இருவரும் இயற்கை எய்தி ஆண்டுகள் கடந்தபோதிலும் என் கண்கண்ட தெய்வங்களாக என் இதயத்தில் என்றென்றும் வாழ்கின்றார்கள். எமது தந்தையார் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றிவந்த இணுவில் ஸ்ரீ அம்பிகைபாகர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வி கற்றேன். பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் உயர்கல்வி பயின்றேன். 1944ல் அரசாங்க சேவையில் சேர்ந்து தற்போது கல்வி அமைச்சில் பணி புரிந்து வருகிறேன். 1956ல் திருநெல்வேலியைச் சேர்ந்த அருளம்பலம் சிவயோகம் என்னும் ஆசிரியை எனது வாழ்க்கைத் துணைவியானார். எங்களுக்கு இரு புத்திரர்களும் ஒரு புத்திரியும் உள்ளனர்.

கேள்வி:- கடைசியாக ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். 'சுடர்' சஞ்சிகையைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்:- 'சுடர்' ஈழத்தில் வெளிவரும் தரமான சஞ்சிகை என்று துணிந்து கூறலாம். தமிழ்ப்பெருமக்கள் பூரண ஆதரவு அளிப்பார்களேயானால் வெகுவிரைவில் வாரவெளியீடாக சுடர்விட்டுப் பிரகாசிக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

பேட்டி கண்டவர்: பொன். பூலோகசிங்கம்,
கொழும்பு வளாகம்.

## ஊரும் பேரும்

யாழ்ப்பாணத்துக்கு வடக்கே அமைந்துள்ளது இக்கிராமம். இக்கிராமத்தை கிழக்கு மேற்கு என இரண்டாகப் பிரித்துள்ளார்கள். சங்கிலியன் ஆண்ட நல்லூர் தொகுதியில் உள்ள கொக்குவில் கிராமத்துக்கு இப்படித்தான் பெயர் வந்துள்ளது என ஒரு கதைஉண்டு:

### கொக்குவில்

எமது கிராமத்தில் குளங்கள் பெருந்தொகையாக இருந்ததாகவும், அங்கு பெருந்தொகையான கொக்குகள் வாழ்ந்து வந்ததாகவும், அக்கொக்குகளை உணவுக்காக வேடர் வில்லின் உதவியுடன் கொல்லுவதாகவும் இது நாளும் பொழுதும் நிகழ்வதால் இக்கிராமத்துக்கு இப்பெயர் வந்தது என்பது கர்ணபரம்பரை.

(கொக்கு+வில்) இவை இரண்டும் சேர்ந்து தான் கொக்குவில் என பெயர் வந்ததாம்.

அனுப்பியவர்,
கேணியடி—எஸ். ஸ்ரீ ஜீவா.

## ஒரு அங்குல மழை

ஒரு குறிக்கப்பட்ட இடத்தில் ஒரு அங்குல மழை பெய்தது என்று வானிலை அறிவிப்பாளர்கள் அறிவித்தால் அதன் அர்த்தம் இதுதான்.

43, 560 சதுர அடி நிலப்பரப்பு கொண்டது ஒரு ஏக்கர். ஒரு ஏக்கரில் ஒரு அங்குல மழை பெய்தால் அஃது 6, 272, 640 கன அங்குலதண்ணீருக்கு சமமாகும். அல்லது 3, 630 கன அடியாகும்.

ஒரு கன அடி தண்ணீரின் நிறை 62.4 இருத்தல். எனவே ஒரு ஏக்கரில் ஒரு அங்குல உயரமுள்ள மழையின் நிறை 226, 512 இருத்தலாகும்.

இனி ஒரு கலன் தண்ணீரின் நிறை 8.345 இருத்தல். எனவே ஒரு ஏக்கரில் ஒரு அங்குல உயரமுள்ள மழையின் நிறை 27,143 கலன்களாகும்.

— தகவல்: அருண்மொழி.

# புதுக்கவிதை

## விடை

நான் உலகறிந்தவன்
உலகின் எங்கும் பரந்தவன்
இந்தியக் கடலில் மூழ்கி
ஈழக்கடலில் எழுந்தவன்
உன்னைப் போல்
ஈழக் குப்பைத் தொட்டியில்
பிறந்தவன் அல்ல
என்றுள் தமிழ் அன்னை

## கவிதை

தமிழை கொஞ்சம் கொஞ்சமாக
சுவைத்து பருகியபோது
நெஞ்சின் அடித்தளத்திலிருந்து
சுவையோடு வந்த ஏவறை தான்
கவிதை.

## வேதனை

தேயிலையின்
தலையைக் கிள்ளி
நாட்டை
வளம் படுத்தும் எம்மை
எமது தலையைக்
கிள்ளாமல்
சாகடிக்கின்றார்கள்!

## சாதிக் கொடுமை

காக்கைக் கூட்டில்
வளர்ந்த குஞ்சுகளில்
ஒன்றின் குரல்
வித்தியாசப் பட்டதால்
காகம் கொத்தி
விரட்டி விட்டது.

புரட்சி வண்ணன்

## தீன் பாடற்றிரட்டு

(பனாட்டு)

பனங்காய்ப் பணியாரம் பனாட்டுக் கொழுக்கட்டை
தினமும் தவறாமல் தின்றுவரின் — மனமெல்லாம்
பொங்கும் மகிழ்ச்சியால் பூரிக்கும் நல்ல உளல்
தங்காது நோயு அதிகம் தான்!

# சாத்தான் வேதம் ஓதுகின்றது



''இறந்தவர்க்காக இருப்பவர் அழும் பொழுது, இருப்பவனும் ஓர்நாள் இறப்பது உண்மை என்பதை அறிந்தும் மனிதன் இறந்தவர்க் காக அழும் பேதமையை எண்ணிட இறைவன் சிரிக்கின்ருன்—யாரோ.

தண்டவாளத்தின் மீது ஓடும் ரயில் வண்டிதான் தடம்புரள்கின்றது என்று சொல் வதற்கில்லை தரையில், தார் ரோட்டில் ஓடும் வண்டிகள் கூட தடம் புரள்வதுண்டுதான். மனேகர் குடிகாரன், கூத்திக்கள்வன் என் பதால் பலரும் அவன் மீது பல் வேறு பொய்க் குற்றங்களையும் சேர்த்து சுமத்த முற்பட்டு விட்டனர். காலத்தை வென்று மனிதனுல் வெற்றிநடைபோட முடிந்திருந்தால் துன்பப் படுகுழிகளை யெல்லாம், மூடி அதன் மீது அவன் இன்பப்பூங்கா அமைந்திருப்பான். நிகழ்வது எல்லாம் இன்பத்தின் நிழல் என ஏமாந்து நிற்கும் அவனுடைய வாழ்க்கையின் கோணங்கள் விதிக்கோடுகளையே மாற்றி யமைத்துக் கொண்டிருந்தன.

பொன்னையாவுக்கு வருத்தம் கடுமையா கிக் கொண்டு வந்தது, சாவித்திரி தகப்பன் வீட்டுக்கு போனவள் போனதுதான். கணவன் முருங்கை ஏறும் வேதாளம் என்று அவள் தீர்மானித்து விட்டாள். அவனை யாராலும் திருத்த முடியாத நிலையில் உள்ளான் என்று தெரிந்தபோது அவனுக்காகமட்டும் வாழ்ந்து கொண்டே பெற்ருரை, உடன் பிறந்தாரை வெறுப்பதில் பிரயோசனமில்லை எனப்புரிந்து கொண்டாள். அந்தத் தீர்மானத்துடன் வந்த வுடனேயே அவள் புறப்பட்டுவிட்டாள்.

இர்ண்டொருநாள் கடமைக்கவும் அங்கே வந்தான் மனேகர். வீட்டுக்குப் போவது பற் றியோ வேறுவிடயமாகவோ அவளுடன் எது வும் கதைக்கவில்லை. பின் அறவே வரவில்லை. காலம் ஒருமாதத்துக்குள் பல்வேறு திருவிளை யாடல்களை நடாத்தி விட்டது.

பொன்னையா காலமாகி அந்தியேட்டி கூடமுடிந்து விட்டது. அன்று மனேகரும் வந் திருந்தான். அவனை தனிமையில் சந்தித்து வீட்டுக்குப் போவது பற்றி பிரஸ்தாபித்தாள் சாவித்திரி.

''ஏன் சாவித்திரி இங்கே இருக்க உனக குப் பிடிக்க வில்லையா?'' என்ருன் மனேகர்.

''என்ன இருந்தாலும் நீங்கள் இல்லாத ஒவ்வொரு நாளும் விடியாத பொழுதாகத் தானே போகுதுங்க''

''அந்த வீடும் இரவல் வீடுதானே?''

''அதுக்காக?''

''நாம் ஒரு வீடு அமைக்கும் வரைக்கும் நீ இங்கேயே இருந்தால் என்ன?''

''நான் இருப்பதில் தவறு ஒன்றும் இல்லை. நீங்கள்........''

''இடைக்கிடை வந்து போகின்றேன்''

''மற்றும் படி........'' அவள் ஹோவெனக் கதறி அழுதுவிட்டாள்.

''சாவித்திரி இதுக்காகத்தான் அதிக மாக இங்கே நான் வரவிரும்புவதில்லை.''

''இப்படி ஒரு சாட்டை வைத்துக் கொண்டு நீங்கள் மனம்போன படி நடந்து கொள்ளுங்கள்.''

''காரணம் தெரியாமல் கதைக்காதே சாவித்திரி''

''களவு செய்பவனும், கொலை காரனும் கூடகாரணம்காட்டித்தான் செய்கின்ருர்கள்.

பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்." என்று கூறிவிட்டு அவள் உள்ளே போய் விட்டாள் அன்று போனவன் ஒரு மாதமாகியும் அந்தப் பக்கம் வரவில்லை.

நாளுக்கு நாள் ஆள் சொல்லி அனுப்பினாள். அவளுடைய பையன் நோய் வாய்பட்டு ஒரு வாரம் படுக்கையாகக் கிடந்தான் அதற்குக் கூட அவன் வரவில்லை. அவள் படும் வேதனைகளை யெல்லாம் பார்க்கும் போது பரமலிங்கத்தின் மனம் குமுறும். கூடப்பிறந்த அண்ணனல்லவா, அவனும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டான். அவன் ஒரு விதமான பேர்விழி, அவன் சில முடிவுகளை எடுத்து விட்டால் அதனை யாராலுமே மாற்ற முடியாது. உடல் ஊனமுள்ளவனாகப் பிறந்து விட்டாலும் உறுதியான உள்ளம் படைத்தவன். அவனுடைய வேகத்திற்கும், உணர்ச்சிகளுக்கும், முடிவுகளுக்கும் அணை போடக் கூடிய ஒரே ஆள் பொன்னையாதான். அவர் இறந்து விட்டபின்பு அவன் யார் எது கூறினாலும் ஏற்க மாட்டான். சகோதரியின் திருமணம் அவனுக்கு அன்றே விருப்பமில்லாத ஒன்று என்றாலும்பேசாமல் இருந்து விட்டான். ஆனால் இன்று...... எப்படியும் அவள் துயரத்துக்கு முடிவு கட்டுவது என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

அன்று காலையில் அவன் புறப்பட்ட வேளையில் தாய் கற்பகம் குறுக்கிட்டுக் கேட்டாள்.

"சாவித்திரியின்ரை பிரச்சனைக்கு இன்றைக்கு ஒரு முடிவு கட்டப் போறன்" என்றான் பரமலிங்கம்

"நல்லது தான் கொப்பர் இருக்கும் வரையில் இது பற்றிக் கேட்கா விட்டாலும் இனிமேல் பார்த்துக் கொண்டிருந்து என்ன செய்யுறது. அவன்ரை துணிச்சலைப்பார் அந்திரட்டி முடிஞ்சு ஒரு மாதத்துக் மோலச்சு ஒரு நாளாவது எட்டிப்பார்த்தானே."

"அவன் என்ன செய்வான் அந்த வேசை விட்டால் தானே?"


"அவளைச் சரிக்கட்டினால் எல்லாம் சரியாகிப்போம். அது சரி அவளுக்குச் சொல்லிப் போட்டுப் போக விட மாட்டாள் பேசாமல் போடா தம்பி" என்றாள் கற்பகம்.

பரமலிங்கத்தின் முயற்சிக்கு ஆதரவு கிடைத்ததும் அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. தன் குடும்பவிடயமாக இது வரையில தனியே சென்று ஒருகாரியம் சாதித்ததில்லை. தகப்பனே முன்னின்று காரியங்களிலீடுபட்டதால் உலகனுபவத்தில் ஈடுபட்டதில்லை. அன்று தன் குடும்பத்திலுள்ள ஒரு பிரச்சனையை, 'நிர்ணயிப்பதற்கோ' தீர்ப்பதற்கோ புறப்பட்டிருக்கிறான்.

காலை மலர்ந்து பொழுது மேல்வானை நோக்கி ஏற ஆரம்பித்திருந்தது, காலைச்சாப்பாட்டினை முடித்துக் கொண்டு, மகனையும் பாடசாலைக்கு அனுப்பிவிட்டு பாத்திரங்கள் கழுவிக் கொண்டிருந்தாள் மதுமலர்.

மனேகருடன் உறவு வைத்து பலகாலமாகிவிட்டது. என்று மனேகர் வேறுபல பெண்களோடு தொடர்பு வைத்துள்ளான் என்று அறிந்தாளோ அன்றே அவன் உறவைத் துண்டித்துக் கொண்டாள். அவளுடைய வாழ்கையில் சில காலங்களுக்கு மட்டுமே மகிழ்ச்சியைக் கொடுக்கும் ஆண்டவன் பின்பு தட்டிப் பறித்துக் கொண்டு விடுகின்றான். இது அவளுக்கு ஒரு சாபக்கேடோ என்னவோ யார் அறிவார்?

இளம் வயதிலே கணவனை இழந்து ஒரு மகனுக்கு தாயாகி வாழ்ந்தபோது மனேகரின் தொடர்ப்பு ஏற்பட்டது. இளைஞனை அவனை மணந்து கொள்ளலாம் என மனப்பால் குடித்




மீன் மழை-

1924ஆம் ஆண்டு மார்ச் மாதம் அவுஸ்திரேலியாவிலுள்ள லாங்கிரிச் எனும் நகரில் மீன் மழை பெய்தது.

இரத்த மழை-

29-6-1928 அன்று மங்கோலியாவில் இரத்த மழை பெய்தது.


கறுப்பு மழை-

14-5-1849இல் அயர்லாந்தில் கறுப்பு மழை பெய்தது.

சிவப்பு, நீலம், வெள்ளை, நிறங்களில் மழை-

14-6-1880 அன்று ரஸ்யாவில் சிவப்பு, நீலம், வெள்ளை நிறங்களில் பெய்தது.

ஆனந்ஜெகநாதன்,
க/சிதம்பரதமிழ் வித்தியாலயம்,
தெல்தெனிய.



துக் கொண்டிருந்த வேளையில் அதுவும் பறி போனது. ஆண்டவன் போடும் நேர்கோட்டில் அவன் விரும்பும் இடங்களில் மட்டுமே மையப்புள்ளி போட்டு கோணங்களையும் வைத்துக் கொண்டு விடுகின்றான். மனிதன் தான் விரும்பும் இடத்தில் அந்தப்புள்ளிகளை வைக்கமுனையும் போது கோணங்களும் மாறி கோடுகளும் மாறி விடுகின்றன. பாத்திரங்களை இயந்திரம் போல கை தேய்த்துக் கொண்டிருந்தாலும் மனம் கடந்த காலங்களை எண்ணி உளைந்தபோது மனம் உருகிக் கண்ணீர் கசிந்து கொண்டிருந்தது, அதே வேளையில் வாசல் வரை வந்து விட்ட பரமலிங்கம் மறுபுறம் திரும்பியிருந்து பாத்திரம் தேய்க்கும் மதுமலரின் கவனத்தைத் திருப்ப செருமினான்.

திடீரென திரும்பிய மதுமலர் எழுந்து நின்ருள். கையில் அழுக்கிருந்ததால் உடனே விழிகளை துடைத்து விடவும் முடியவில்லை. அவளுடைய அழகு விழிகளில் நீர் ஒழுகிக் கொண்டிருந்தது. திடீரென ஏற்பட்ட ஓர் சூழ்நிலையில் அவளால் எதுவும் பேச முடிய வில்லை. வாளியில் உள்ள நீரில் கைகளை கழுவிய படி "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்ருள்.

"மதுமலர் வீடு இதுதானே?"

"ஆமாம் நீங்கள் யார்......?"

"நான் சாவித்திரியுடைய அண்ணன்"

"ஓ...... வாருங்கள்" என்று உள்ளே அழைத்துச் சென்ருள். முன்விருந்தையில் உள்ள நாற்காலியில் உட்காரும்படி கூறி விட்டு உள்ளே சென்ருள்.

சில நிமிடங்களில் முகத்தை துடைத்துக் கொண்டுவந்து கதவுடன் நின்று கொண்டாள், 'முழுக்க நனைந்த பின்பு முக்காடு தேவையா?' என்று எங்கோ கேட்ட பாட்டு ஒன்று ஞாபகத்துக்கு வந்தது பரமலிங்கத்துக்கு. நல்ல குலமகள் என்ருல் பிற ஆடவர் முன் வந்து நேருக்கு நேர் உட்கார மாட்டாள் என்றும் அறிந்திருந்ததால், மதுமலர் பற்றிய விடயத்தினையும் தெரிந்திருந்ததால் அப்படி நினைத்துக் கொண்டான்.

"உங்களோடு சில முக்கியமான விடயங்கள் கதைக்க வேண்டும் இங்கால வந்திருங்களேன்."

"நான் வருவதற்கு அஞ்சவில்லை. மனேகரின் தொடர்பால் ஏற்கனவே எனக்கு நல்ல பெயர். அது ஓய்ந்து விட்டாலும் இங்கே வந்து விட்ட உங்களையும் அந்தப் பழி பற்றிக் கொண்டுவிடும். நரம்பில்லா நாக்கால் எதையும் பேசுவார்கள். நான் ஏற்கனவே கெட்ட பெயரை எடுத்துக் கொண்டவள், அப்படி ஒரு பெயர் என்னுல் உங்களுக்கு ஏற்படவேண்டாம்." என்ருள்.

அவள் கூறுவதில் உள்ள நியாயங்கள், உண்மைகள் யாவும் பரமலிங்கத்தின் மனதை உறுத்தவே செய்தன. அவன் என்னவோ கேட்க நினைத்தவன் பெட்டிப்பாம்பாய் அடங்கிப் போனுன்.

"நீங்கள் வந்த நோக்கம் என்னவோ நான் அறியேன். மனேகர் இப்ப வீட்டுக்கு நேரகாலத்துக்கு வருவதில்லையா? அவர் ஒழுங்காக வந்திருந்தால் நீங்கள் இங்கு வந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கின்றேன்" என்ருள்.

"உண்மைதான். நான் ஏன் இங்கு வர வேண்டும்? அதை நீங்களே உணர்ந்து கொண்டீர்கள். உண்மையைச் சொல்லப் போனுல் இதுவரை காலமும் அப்பு இருந்தார். அவரும் போய் விட்டார். இனியாவது அவளை நிம்மதியாக வாழ வைக்கும் பொறுப்பு உங்களிடம் தானுண்டு. நீங்கள்தான் அவளுக்கு வாழ்வழிக்க வேண்டும். அவள் வாழ்வை இனியும் நீங்கள் நரகமாக்கி விடாதீர்கள்." என்றுன்.

அவள் விழிகளில் நீர் கசிந்தது. அவனும் அழுதான். இருவர்க்கிடையிலும் பேச்சுக்கள் தடைப்பட்டு நின்றன.

"நீங்கள் நினைக்குமளவுக்கு நான் இல்லை" என்ருள்.

அவள் கூறியதைப் பரமலிங்கம் தவருகப் புரிந்து கொண்டதும் ஆத்திரம் பீறிட்டு வந்தது. வாயில் வந்தபடி தூசணை வார்த்தைகளால் பேசித்தீர்த்து விட்டான்.

"பேசி முடித்து விட்டீர்களா?" என்று கேட்டாள். அவள் முகத்தில் ஓர் அமைதியான உறுதியான ஓர் முடிவு பிரகாசித்தது.

"பேசி முடித்து விட்டேன். என் தங்கையின் வாழ்வுக்காக கொலை வேண்டுமானுலும் செய்வேன்..." என்று கதறினுன் பரமலிங்கம்.

அவள் எதுவும் பேசாமல் உள்ளே சென்ருள். சிறிது நேரத்தில் கையில் இரண்டு கடிதங்களோடு வந்தாள்.

"நீங்கள் இரண்டு கடிதங்களையும் படித்து முடித்து விட்டு ஒரு முடிவுக்கு வாருங்கள். அதற்கும் வர முடியாவிட்டால் எனக்குச் சிறு உதவி செய்யுங்கள். உங்களைக் கொலைகாரராக்காமல் நானே இந்த உலகத்தை விட்டு ஒழிந்து போகின்றேன். இது என் ஒரே பிள்ளையின் மீது ஆணை." என்ருள்.

அதுவரை உச்சஸ்தாயில் நின்ற ஆவேச உணர்வுகள் குலுங்கிச்சமமாகின. என்ன உதவி என்று கேட்பது போல அவளைப் பார்த்தான்.

"என் பிள்ளையை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பை நீங்கள் ஏற்பீர்களா?" என்ருள்.

அவள் நீட்டிய கடிதங்கள் இரண்டையும் வாங்கிப் படித்தான். அவனுடைய கல் மனது உருகிக் கசிந்தது. அவனுக்குப் புரியாத பல விடயங்கள் புரிந்தன. சாவித்திரி அவளைப் பற்றிக் கூறிய விடயங்கள் யாவும் உண்மை என்பதை உணந்தான்.

"நான் வேசியில்லீங்க. நானும் ஒரு மகளுக்குத் தாய். மனேகரை கல்யாணம் செய்ய ஆசைப்பட்டேன். அது......அது......கடவுளே இன்று கூட நான் பயந்து செத்திட்டிருக்கேன். மனேகரின் போக்கால் என் மகனின் எதிர் காலமே பாதிக்கப்பட்டுவிடுமோ என்று. சொல்லுங்கள் நான் வேசியா? உங்கள் சகோதரி வாழ்வைக் கெடுத்தவளா?"

"இல்லை. இல்லை" என்றுன் பரமலிங்கம்.

"என் பிள்ளையை நீங்கள் ஏற்ருல் நானே என்னை அழித்துக் கொண்டு...." ஹோ வெனக் கதறி அழுதாள்.

"மதுமலர். நீ தப்பாக நினைக்கவில்லை என்ருல். நான் ஒன்று கூறுகின்றேன்......" என்று அவன் தொடர்ந்தபோது மதுமலர் தன்னையே நம்பமுடியாதவளாய் அவன் பாதங்களில் வீழ்ந்தாள்.

(வளரும்)

# வாசகர் வாய்மொழி

## கோண நாடு

பங்குனி, 78 சுடரில் வெளியான சிறந்த அம்சங்களில் ஒன்ருன "கோணநாடு" கவிதை படிக்கப் படிக்க இனித்துச் சுவைத்தது.

முழுநிலவில்—ஏன், கும்மிருட்டிலும் கூடத் தான் திருமலையை ரஸிக்க வாருங்கள் என்று அழைக்கிருர் "புதுவை ரத்தினதுரை"

க. மாணிக்கம், அச்சுவேலி

## சுடச்சுட வேண்டும்!

இடர் ஏதும் வாராமல்!

சுடர் எமக்குச் சுடச்சுட மாதாமாதம் மளமளவென வரவேண்டும். காசியண்ணுவின் கட்டுரையைச் சிறிது நெட்டுரையாக்கித் தாருங்களேன். அது எமக்கு தெகிட்டவில்லை. தேனுக இனிக்கிறது.

நிலாதமிழின்தாசன்
நிலாவெளி-3

## வாழ்த்து

பங்குனி சுடர் பெற்றேன். பிரமாதம் அடுத்த இதழ் சுடரின் 4வது பிறந்த நாள் சுடருக்கு எனது வாழ்த்துக்கள் உரித்தாகுக.

நாகர்பதியூர்
சிவா

## சார்

டொக்ரர் சேவியரின் கட்டுரையும் நன்ருக இருந்தது. ஈழம் தமிழனுக்குத்தான் சொந்தம் என்பதை ஆதார பூர்வமாக எடுத்துச் சொன்ன அவருக்கு என் நன்றி.

"சார்", டாக்டர், நர்ஸ், என்று இந்தியப் பாணியில் எழுதாமல் சேர், டொக்ரர் நேர்ஸ் என்று நாம் எழுதுவதே அழகு.

ச. ஜெயானந்தன்
திருகோணமலை

சுடர் பங்குனி இதழ் படித்தேன் அதின் அட்டையில் நர்ஸ் அழகாகவே இருந்தாள் இதழ் அட்டையைத் தொட்டதும் கிழிந்து விடுகிறது. அட்டையை ஒரு நல்ல காகித அட்டையில் வெளியிட்டால் என்ன?

எஸ். ரவீந்திரன்
கொள்ளுப்பிட்டி

சிறைச்சாலை இனிக்கும் காசியின் அனுபவம் என் கண்களைக குளமாக்கி விடுகின்றன. காசியின் கவி ஆயிரம் அர்த்தங்களை படிப்பிக்கின்றன. நாம் சுடரில் விரும்பிப் படிப்பதே எம் அபிமான காசியின் கைவண்ணத்தால் மலரும் கவிதையும்,சிறைச்சாலை அனுபவங்களுமே.

ராஜம் ஜெகநாதன்
விஜயா ஜெகநாதன்
தெல்தெனிய.

கவலை வேண்டாம் கவிஞரின் சிறைச்சாலை அனுபவம் தொடரும்.

ஆசிரியர்.

## ஆசிகள்:

சுடரில் வரும் ஓவியங்களில் ஓவியரின் கையொப்பத்தைக் காணும். புதிய ஓவியர் போலும்.

சாத்தான் சுடரில் வேதம் ஓதுவதை ஏன் நிறுத்திவிட்டார்?

ஹி! ஹி! ஹி! பக்கம் என்னையும் ஹி! ஹி ஹிக்குள்ளாக்கியது. தரமான நகைப்புக்கள் தொடர்ந்து இதுமாதிரி வெளிவர என் ஆசிகள்.

வனஜா—கொழும்பு.

'சிறைச்சாலை இனிக்கும்' படிக்கும் போது இனிக்கவில்லையே! வருத்துகிறது! கவிஞரின் எழுத்து எப்படி எப்படி எல்லாம் கொஞ்சி விளையாடுகிறது. வயிற்று நோய்க்கு வாய் கொப்பளிக்க மருந்து கொடுத்ததை நினைத்து அந்த நேரத்திலும் வயிறு குலுங்க சிரித்த கவிஞரை என்ன சொல்ல? வயிறு குலுங்கச் சிரித்தேன் என்று எழுதியே அழவைத்துவிட்டாரே!

'இந்த 'கோண நாடு' எங்கே இருக்கிறது? இத்தனை அழகுடையதான அதை எங்கே இருக்கிறது என்று சொல்ல முடியுமா? நமது திருமலைதான் இது என்று நம்பமுடியவில்லையே? புதுவை இரத்தினதுரையின் கவிதைகளை படித்தபோது இப்படித்தான் நினைக்க தோன்றுகிறது. ஆகா! என்ன அபாரமான கற்பனைகள்! திருகோணமலையை இன்னெரு முறை பார்க்கவேண்டும் போல இருக்கிறது.


கதிர்வேல் விக்னேஸ்வரன்,
குடத்தனை.

மில்க்வைற் தயாரிப்புக்களின் மேலுறைகளை சேகரித்து அனுப்பி சிறந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

MWS
மில்க்வைற்

மில்க்வைற்—யாழ்ப்பாணம்
தொலை பேசி 7233

கிளை:
79 மெசஞ்சர் வீதி,
கொழும்பு 12.
தொலை பேசி: 36063




## அண்ணா தயாரிப்புக்களை

உங்கள் வாடிக்கை கடைகளிலும்
இலங்கையின் எல்லா கடைகளிலும் கிடைப்பது

அண்ணா கோப்பி
அண்ணா தேயிலை
அண்ணா பற்பொடி
அண்ணா பத்தி
ஜெயந்தி பத்திகளை.

இவற்றின் வெற்றுப் பக்கட்டுகளை அனுப்பி விரும்பிய பரிசை பெற்றுக்கொள்ளுங்கள்.

தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும்:—

# அண்ணா தொழிற்சாலை

இணுவில். டெலிபோன்: 7412




இப்பத்திரிகை 194ஏ, பண்டாரநாயகா வீதி, கொழும்பு-12ல் அமைந்துள்ள
இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.